அகநக

(வெண்பா விருந்து)

அகநக

(வெண்பா விருந்து)

ச. கந்தசாமி

CORAL PUBLISHERS & DISTRIBUTORS
Avadi, Chennai - 600 055

AGANAGA
Author: **S. Kandasamy**

CORAL PUBLISHERS & DISTRIBUTORS
Coral Estate: No. 1-A, Morai Sarath Kandigai Main Road, Morai Pulikuthi Village, Nagoor Andavar Nagar, Avadi, Chennai - 600 055 E-mail: coralbooks2016@gmail.com Mob: 90430 50666

© Publisher
All rights reserved
No part of this book may be reproduced, stored in retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without prior written permission of the publisher, except for the use of brief quotations in a book review.

ISBN : 978-93-48804-32-7 | Code: CPD422 | First Edition : 2025

Cover Design and Inner Text by: Gemini Design 9840487404

Printed by: Mani Offset, Chennai

இன்னும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறது மரபுக் கவிதை. இத்தொகுப்பின் மூலம் உறுதியாக சொல்ல முடிகிறது. ஒரு காலத்தில் கவிஞர்களால் கொண்டாடப்பட்டு போற்றப்பட்டு வந்தது எங்கே காணவில்லையே என ஓர் ஆதங்கம் இருந்தது. அந்த ஆதங்கத்தை உடைத்தெறிந்திருக்கிறது இத்தொகுப்பு.

வருங்காலத்தில் மரபுக் கவிதைகளை வாழவைத்த கவிஞர்களில் **ச. கந்தசாமி** அவர்கள் முக்கியமானவராய் கருதப்படுவார். இவ்வெண்பா கவிதைகளை வாசிக்கும் போது ஒரு பாரதி, ஒரு கண்ணதாசன் அவ்வட போது வந்து போகிறார்கள் என்று உணரமுடிகிறது.

முக்கியமாய் இலக்கியம் அறிந்தவர் மட்டுமே புரிகிற மாதிரியான பாடல்களே அல்ல; சாமான்யனு புரிந்து மென்று சுவைக்கிற பாடல்களாய் சமைத்திருப்பது கவிஞரின் கைப்பக்குவம் என்றே சுட்டலா

ஆறு அதிகாரங்களில் எதுவும் வீண் போகாத மிளிரும் முத்துகளாய் நெஞ்சைப் பற்றி இழுக்கின்ற

எதார்த்தமும் அழகியலும் பாடல்களை மெருகேற்றுவதோடு அல்லாமல் நம்மை எங்கோ தனித்தீவுக்கே கொண்டுபோய் விடுகிறது.

கவிஞரின் இம்முயற்சியை தமிழ் இலக்கிய உலகம் பாராட்டிப் போற்றும் காலம் வெகுதூரமில்

இந்நூலினை வெளியிட்டு மகிழ்வதில் பெருமை கொள்கிறது எம் நிறுவனம்.

- பதிப்பகத்தார்

உள்ளே...

1) அகநக 7

2) அன்னை மடி 26

3) என்னவனே! என்னவனே! 46

4) தமிழே! அமுதே! 67

5) நேர்+நேர்=தேன்பா 81

6) மாசிலா மலர்கள் 102

அகநக

அறிமுகம்

எங்கோ பிறந்து எங்கெங்கோ வளர்ந்து ஆளாகி நாம் வசிக்குமிடம் ஒன்றென்பதால் ஒவ்வோரிடத்திலும் நம்மிடம் ஏதோ ஒருவகையில் தொடர்பு ஏற்பட்டு, பாசத்துடன் பழகி, நட்பு பாராட்டிய நண்பர்கள் நிறைந்த வாழ்வே நிறைவான வாழ்வாகும். பள்ளிப் பருவத்திலிருந்தே எண்ணற்ற நண்பர்களின் ஊக்கத்தாலும் அன்பாலும் பாதுகாக்கப்பட்ட சிறுபறவை நான்.

அந்த நட்பைக் குறித்து நான் இயற்றிய 60 வெண்பாக்கள் 'அகநக' என்ற தலைப்பில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளது. எனது வெண்பாக்களைச் செம்மையாக்கி சீர்படுத்திய நண்பர் லோகநாதன் மற்றும் இதற்கு அணிந்துரை நல்கிய நண்பர் ஆன்டன்பெனி (இயற்பெயர்: இரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர்) அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்பும் வயதும் படிப்பும் பதவியும்
ஒண்பொருளும் ஒத்தவனை உத்தம - நண்பனாய்
பெற்றவர்கள் பேறுபெற்றோர்; யாம்பெற்றோம் நட்பதனை
பொற்றமிழால் பாடுகின்ற பேறு.

- ச.கந்தசாமி

பொழிப்புரை தேவைப்படாத சங்க இலக்கியம்

வெண்பாவின் செப்பலோசை பிடிக்கும் எனினும் அதன் வார்த்தைகள் பிரித்து, பொருள் உணரும் சாத்தியங்கள் அற்ற என் இலக்கிய அறிவை நினைத்தால் பாவமாக இருக்கும்.

நிகழ்காலத்தில் அதனுடைய சீர் மரபில் லயிக்கவும் திளைக்கவும் யாருமில்லை என்கிற கூற்றினைப் பொய்யாக்க, தொடர்ந்து வெண்பாவில் பயணப்படும் புலவர் கந்தசாமி அவர்களின் முயற்சி பெருமைப்பட வேண்டிய ஒன்று.

தமிழ் இலக்கிய வெண்பாவில் எழுதுவது இருக்கட்டும், அதுபற்றி பேசக் கேட்டே மூன்று தசாப்தங்கள் ஆகின்றன. திருக்குறள் வாசிக்க நேரும்போது அதன் பொருள் தாண்டி நாம் ஒரு குறள் வெண்பாவை வாசிக்கிறோம் அல்லது வாசிக்க முடிகிறது என்கிற சிலிர்ப்பு இருக்கும்.

பேராசிரியர்களும் பயணப்படத் தயங்கும் அதன் சிக்கலான இலக்கண வேர்களுக்குள் வெகு இயல்பாக நம்மையும் கூட்டிச் சென்றிருக்கிறார். இதற்கு முன்னும் புலவரின் மூன்று தொகுப்புகளை வாசித்திருக்கிறேன், இம்மியும் பிசகாத இலக்கண வரம்புக்குள் ரசனையாக உணர்வுகளைக் கடத்தியிருந்தார்.

அந்த நம்பிக்கையில் இந்தத் தொகுப்பினையும் வாசித்தேன். நட்பதிகார அத்தியாயங்களில் வள்ளுவரின் தொடர்ச்சியாக இதனை எழுதியுள்ளார். எளிய மொழியில் வழுவாத சங்க இலக்கியத்தில் எழுதியிருப்பது மிகவும் சிறப்பு.

நவீனத்துவ இலக்கியம் பரந்து விரிந்த நிலப் பரப்பில், நதியைப் போல் அழகாக மரபுக் கவிதைகளை அதுவும் மனதுக்குப் பிடித்த உவமை உருவகங்களுடன் எழுதியிருப்பது உண்மையிலேயே கவிஞர் புலமையின் மணிமகுடமாக அமைகிறது.

பொழிப்புரை தேவைப்படாத இந்த சங்க இலக்கிய நட்பதிகாரத்துக்குள் வாருங்கள் பயணப்படலாம். இதுவொரு புதுவித அனுபவம் தரும்.

அன்புடன்

... ஆண்டன் பெனி

அகநக



1. காப்பாய் அறத்தினை; காப்பாய் அருவினை;
காப்பாய் இருந்தெமக்கு கூர்மதி - சேர்ப்பாய்;
இமிழ்திரைசூழ் நல்லுலகில் முந்தி யுதித்தத்
தமிழ்க்கொடியே நட்பதனைத் தாங்கு.

2. எழுத்தாய் எழுந்தாய்;நற் சொல்லாய் மலர்ந்தாய்;
பழுத்தாய் பொருளாய்; விதையாய் - விழுந்தாய்
மனத்துள்; அமுதைப் பொழியும் தமிழே
எனக்குமென் நட்பிற்கும் காப்பு.

■ அ க ந க | ச. கந்தசாமி ■ 10

3. பூவினங்கள் பூத்துக் குலுங்கும் வனத்தைப்போல்
பாவினங்கள் பன்னூறு தோற்றுவித்து - நாவினிக்கப்
பாடுவோரை ஆட்டுவிக்கும் பூந்தமிழாம் தாய்மொழியை
நாடுவோரை நட்பென்போம் நாம்.

4. எண்ண இனிக்கும் இதயத்தின் பாடலிது;
உண்ண இனிக்கும் அமுதத்தின் - கிண்ணமிது;
வாழ்ந்திட்டோம் வாழ்வாங்கு) எனக்காட்டும் சாட்சியிது;
ஆழ்ந்தகன்று நிற்கின்ற நட்பு.

5. நல்லதொரு நட்பினை தேடுவ தெங்ஙனம்;
நல்லதொரு நண்பனாய் உன்னையே - உள்ளபடி
ஆக்கிக்கொள்; அன்பரெலாம் நாடியுனை நட்டுதம
தாக்கிக்கொள் வாரே மகிழ்ந்து.

6. நண்பனைப் பற்றி விவரித்தால் கேட்பவருன்
பண்பினை யாதென் றறிவாரே; - புண்புடக்
கூடாது நட்புள்ளம் என்றெண்ணி வாழ்பவர்க்கு
ஈடேதிப் பூவுலகில் தான்.

7. எதிர்ப்பவர் ஆயிரம்பேர் என்னெதிர்நின் றாலும்
கொதித்தெழும் நண்ப னொருவன் - மதித்துடன்
நின்றாலும் போதுமேநான் யானைபோல் நேர்கொள்வேன்;
வென்றாலும் தோற்றாலும் ஒன்று.

8. என்னென்ன செய்வாயுன் நட்புக்காய் என்றுகேட்டாய்;
முன்னம்நான் செய்ததை மட்டுமின்றி - சொன்னதையும்
செய்வேன்நான் சொல்லாமல் என்னுயிரும் தந்திடுவேன்
எய்யாமல் செல்லுமிந்த அம்பு.

9. வெண்ணிலவு காட்டியன்னை ஊட்டிவிட்ட சோறுபோல்
மண்ணளித்த மாங்கனி சாறதுவும் - உண்ணுவித்த
ஊட்டம்போல்; நண்பருடன் சேர்ந்தருந்தும் நீர்கூட
வாட்டத்தை நீக்கும் அமுது.

10. ஏன்எதற்கு என்றெதுவும் கேட்காமல் பின்செல்வேன்;
நான்எனது என்றெதுவும் இல்லாது நண்பனுடன்;
வாஎழுந்து என்றாலும் போதும் உறுதியுடன்
நானெழுந்து செல்வேன் தொடர்ந்து.

11. மதிப்பெண் குறைவால் அடிவாங்கி நின்றோம்;
விதித்ததை மீறியதால் தண்டனையாய் மைதானம்
சுற்றிவந்தோம்: பார்க்கின்ற போதெல்லாம் நண்பனிதைப்
பற்றித்தான் சொல்வான் சிரித்து.

12. திருச்செந்தூர் சென்னை மதுரைஏற் காடு
திருச்சிராப் பள்ளி பழனி - திருவாரூர்
குற்றாலம் ஊட்டிகொடைக் கானல்நாம் சேர்ந்தொன்றாய்
சுற்றாத ஊரெதுவும் இல்.

13. மண்டுதுயர் ஆற்றாது மாள்வதற்குச் சென்றபோது
கண்டுதுயர் மாற்றித் தணிவித்தான்; - விண்டுநான்
சொன்னதற்கு நஞ்சினில் பாதி எனக்களித்து
உண்ணென்றான் நட்பால் உயர்ந்து.

14. நற்றொழிலால் பெற்றபெருஞ் செல்வத்தைக் காட்டிலும்
கற்றோன் எனப்பெயர் பெற்றதைக் காட்டிலும்
அன்புடை நெஞ்சத்தார் நட்பினையாம் பெற்றதே
மன்பதையில் மேலாஞ் சிறப்பு.

15. எடுத்தும் கொடுத்தும்இன் சொல்லால் கதைத்தும்
அடுத்தமர்ந்து ஊட்டிவிடத் தேனாய் இனிக்கும்;
இருப்பதை நண்பருடன் சேர்ந்து பகிர்ந்து
விருப்பமுடன் உண்ணும் விருந்து.

16. பிறந்து வளர்ந்து பலதும் அறிந்து
சிறந்து விளங்கும் பொழுதில் - அறந்தெரிந்து
ஆராய்ந்து நட்டவர் கேண்மை இறக்குமட்டும்
சீராய் வளரும் தொடர்ந்து.

17. உண்பதற்குக் கூட உதவி எதிர்நோக்கும்
எண்பதுக்கும் மேலே வயதான - நண்பனைக்
கண்டதும் கண்கள் கலங்கும் முதியவரின்
பண்பதற்கு பல்லாண்டு பாடு.

18. தந்தை மகனென்ற சொந்தம் கடந்தவர்கள்;
சிந்தையில் ஒன்றுபட்டு தோழமை பூண்டவர்கள்;
நட்பெனும் பூவதன் நன்மை யுணர்ந்தவர்கள்
பெட்பினை பாடுவதே பாட்டு.

19. வருத்தப் படாதவர்கள் ஒன்றாகக் கூடி
இருப்பவரை செத்தவரை ஏளனஞ் செய்து
பொறுப்பின்றி ஊர்சுற்றி பொல்லாங்கு பேசி
வெறுப்பை வளர்ப்பதல்ல நட்பு.

20. உன்பார்வை எல்லைக்குள் நண்பனே நானிருக்க;
உன்குரல் கேட்கின்ற தூரத்தில் நின்றிருக்க;
எந்நாளும் உன்வாசம் நெஞ்சில் நிறைந்திருக்க;
எந்நாளும் வேண்டுகின் றேன்.

21. எண்ணியெண்ணிப் பார்க்கின்றேன் ஒவ்வொன்றாய், நம்மிடையே
எண்ணவோட்டம் ஒத்திருப்ப தெல்லாமும்; - மண்ணில்
மனிதனாய் தோன்றினேன் உன்னட்பில் வீழ்ந்தே
இனியனாய் பூத்தேன் இசைந்து.

22. எனையன்றி யாரறிவார் தோழாஉன் உள்ளம்;
உனைப்பற்றி ஊரார்கள் என்ன - நினைத்தாலும்,
கூச்சமின்றி பேசினாலும் கேளேன்; தலைமயிரே
போச்சென் றிருப்பேன் புரிந்து.

23. கரைபுரண் டோடுகின்ற வெள்ளம்போல் நம்மின்
உரையாடல் காலம் கடந்தும் - வரையின்றி
செல்கிறது; ஒவ்வொரு நாளும் புதுக்கதையை
சொல்கிறது நட்பில் திளைத்து.

24. மற்றவர்கள் கேட்கின்றார் உன்னுடன் எப்படிநான்
நட்பானேன் என்று தெரியாமல்; பண்பெனக்கு
கூடவொன்றும் ஏதுமில்லை; பூட்டைச்செய் தான்சேர்த்து
கூடவே சாவியும்செய் தான்.

25. உற்றேன் பெருநோயென் றென்னைக்கை விட்டுவிட்ட
உற்றார் உறவினர் போலன்றி - பற்றால்
எனக்குதவி நோய்தீர வாய்ப்பளித்த நண்பன்
எனக்கொரு பொக்கிசம் தான்.

26. கூழுக்கு வள்ளுவன் ஒன்றுமட்டும் தந்துவிட்டு
பாழுக்கா ஐந்தினை தந்திட்டான் நட்பிற்கு;
பட்டறிந்து சொல்லிய பாடத்தைக் கற்றறிந்து
நட்பறிந்து நல்லோரை நாடு.

27. நண்பனைப் போல்நடித்து வஞ்சனை செய்கின்ற
பண்பிலா மாந்தர் பலர்வருவார் எச்சரிக்கை;
தந்திரமாய் பாராட்டி நட்பை வணிகமாக்க
வந்தவர்கள் தாசியர்க்கு நேர்.

28. அன்னை யிடம்கூட சொல்ல முடியாத
முன்னைத் தவறுகளைக் கேட்டிருந்து - என்னை
சரிசெய்ய ஆற்றுவிக்கும் நண்பனைப் போன்றோர்
பரிசொன்றைக் கண்டதோயிப் பார்.

29. அன்றுமட்டும் நண்பன் வரவில்லை யென்றிருந்தால்
இன்றுஎனை இக்கோலத்தில் கண்டிருக்க வாய்ப்பில்லை;
நண்பனால் நல்லவிதம் வாழ்வுபெற்ற கோடிகதை
மன்பதையுள் கேட்டவர்கள் உண்டு.

30. தன்னுணவில் பாதி எனக்களிப்பான் உண்பதற்கு;
தன்னுடையை என்றும் தயங்காமல் நானணியத்
தந்திடுவான்; நண்பனவன் என்நலமே தன்னலமாய்
சிந்திக்கும் சோதரன் தான்.

31. அயர்ந்திருக்கும் போதெல்லாம் ஆற்றுவிக்கும்; மாளாத்
துயரென்ற போதெல்லாம் தோன்றித் - துயர்தணிக்கும்;
நாடியதும் நீங்குகின்ற பேர்களுக்கு மத்தியில்
ஓடிவந்து தாங்குகின்ற நட்பு.

32. மன்னனே யானாலும் கண்டவுடன் நண்பனை
என்னடே ஏயென்று சொல்லுகின்ற - வன்மை
வழங்குவது நட்பன்றி வேறேது; கேண்மை
வழங்குகின்ற வாய்ப்பது தான்.

33. எங்கோ யிருக்கின்றான் என்றுமக்கள் வாழ்ந்திருப்பார்;
எங்கோ யிருந்தாலும் நண்பனைநான் - இங்கே
நினைந்திருப்பேன்; பாலியத்தின் வாசனையால் கண்கள்
நனைந்திருக்கும் நட்பை நினைந்து.

34. ஓடிப் பிடித்துவிளை யாடியதும், கண்மறைவாய்
பீடிக் குடித்துஅடி வாங்கியதும் - பாடித்
திரியும் பறவைகள் போல்வாழ்ந்தோ மென்று
புரிகிறது எங்களுக்கிப் போது.

35. எந்நீர்மை கொண்டாலும் எண்ணெயை யாராலும்
தண்ணீ ருடன்கலக்க ஏலாது - தண்ணீரும்
பாலும் ஒருமய மாகிக் கலந்தது
போலும் நிலைத்திருக்கும் நட்பு.

36. ஊர்நடுவே பேசியும் போதாமல் வைக்கோலின்
போர்நடுவே பேசியும் தீராமல் - யார்நடுவே
வந்து மடைமாற்றிச் சென்றாலும் தன்வழியில்
வெந்து தணியுமிக் காடு.

37. செல்வமுங் கல்வியும் வன்மையும் தோற்றமுமாய்
பல்வகை மேன்மைகள் வேண்டாமே; - அல்லலுறும்
போது துணையிருந்து பேணுகின்ற அன்புள்ளம்
போதும் ஆன்றோர்நட் பிற்கு.

38. நண்பன் நண்பனென்று நாளும் துரத்துகின்ற
நண்பரெல்லாம் நண்பரல்ல; நல்வினையால் - பண்பதனால்
ஒன்றானோர் கண்காணா தேசத்தில் வாழ்ந்தாலும்
அன்பறாமல் நட்பதே நட்பு.

39. ஆறோடும் போக்கில் அலைக்கழியும் சிற்றெறும்பாய்
யாரோடும் சேராமல் நானிருந்தேன் - வேரோடும்
மண்ணோடும் என்னைப் பெயர்த்தெடுத்து பார்போற்றும்
வண்ணமாய் மாற்றியது நட்பு.

40. சொல்லால் விளக்க முடியாது நட்பினை
எல்லாம்; உறவாடும் பேறன்றி வேறெந்த
நோக்கமின்றி நட்டோர்கள் தாமறிவர் நட்பிது
நீக்கும் மனச்சோர்வை யென்று.

41. உற்றநண்ப ரோடிணைந் துண்ணும் விருந்துக்காய்
மற்றெல்லாக் காரியமும் தள்ளிவிட்டு - பற்றுடன்
வந்து பாிவுடன் பேசிச் சிாிப்பவர்க்கு
எந்தக் கவலையும் இல்.

42. தெள்ளிய நட்பைப் பிாிவதொன்றும் குத்திய
முள்ளைப் பிாிப்பதைப் போலன்று; - உள்ளுக்குள்
தோன்றிய கட்டியைக் கத்தியால் வெட்டுதல்
போன்றதெனச் சொல்வார்நட் டோர்.

43. தட்டிக் கொடுக்கும்; தனக்கென வைக்காமல்
விட்டுக் கொடுக்கும்; நான் வென்றிட்டால் - கட்டிப்
பிடிக்கும்; துயரெனில்முன் நிற்கும் எனக்குப்
பிடித்தயென் நண்பனின் கை.

44. வனைந்து கிடைத்தமண் பானையல்ல யாரும்
முனைந்துபெற்ற பட்டமு மல்ல - எனைவாட்டும்
முன்னை வினைதீர்த்தே என்னையே நானறிய
தன்னைக் கொடுத்தது நட்பு.

45. அன்பருடன் வாழ்ந்தால் நரகமும் சொர்க்கமாம்
இன்பநடை ஏதென்றால் நான்சொல்வேன் - நண்பருடன்
சோர்ந்து விடாது சிரித்தபடி பேசிநாம்
சேர்ந்து நடக்கும் நடை.

46. நட்பைப் பிரிந்திட வேண்டிய சூழ்நிலை;
நட்பைப் பிரிந்திடவும் நாட்டமில்லை - நட்புடன்
நானும் தொடர்ந்திருப்பேன்; என்னோ டெதிரியாக
வேனும் தொடர்பில் இரு.

47. அரியதாம் மின்னி ஒளிர்வதாம் செல்வர்க்
குரியநல் வைரத்தைப் போலே - பெரியதாம்
நண்பன் மறைந்ததைக் கேட்டதும் தாங்காது
கண்நிறைந்து கொட்டும் துளி.

48. உனதிறுதி யாசை எதுவென்று கேட்டால்
மனதுறுதி மாறாமல் சொல்வேன் - எனதிறுதி
நாட்களில் நெஞ்சம் நிறைய நினைவளித்த
ஆட்களுடன் வாழ்கின்ற வாய்ப்பு.

49. சாதிமதம் பார்க்காது; செல்வத்தைச் சீண்டாது;
பாதியுண்மை பேசாது; கொண்டதனால் - சாதிக்கும்;
பேதமொன்றும் காட்டாது; பார்வைக் குருடான
காதலும் நட்பதுவும் நேர்.

50. எதிர்வரும் போதே எடைபோட் டிருப்பான்;
பதில்எதிர் பாரா துளமறிவான்; கேட்கவும்
வேண்டாது தன்னையே தந்திடும் நண்பன்நான்
வேண்டாமல் பெற்ற வரம்.

51. வளரும் பிறையாய், பயில்தொறும் நூலாய்,
தளரும் பொழுதெல்லாம் தாங்கிடும் கோலாய்,
சறுக்கும் பொழுதெல்லாம் நேர்செய்யும் வேலாய்,
இருப்பதன்றோ ஆன்றோர் நட்பு.

52. தனிமை யுணர்வைத் தகர்த்திடும்; வாழ்வில்
இனிமை யுளதென்று காட்டும்; - கனிவை
முகத்தில் கொணர்ந்து மெருகேற்றும்; நட்பே
அகத்தில் மலர்ந்திருக்கும் பூ.

53. கரையோரம் தேடுபவர் கண்டெடுப்பார் சிப்பி;
நுரையீரல் கொள்ளுமட்டும் காற்றை - நிறைத்தவரே
ஆழ்கடலில் மூழ்கிவெண் முத்தெடுப்பார்; நட்புறவில்
ஆழ்ந்தவரே மாந்தருள் முத்து.

54. பார்த்துப் பழகியதும் இல்லை; பலநாட்கள்
சேர்ந்து திரிந்ததும் இல்லைகை - கோர்த்து;
தொலைவினில் எங்கோ வசித்தாலும் உள்ளக்
குழைவதே உன்னத நட்பு.

55. உண்ணக் கனிதரும்; போர்த்த உடைதரும்;
எண்ண இனிதாகும் நட்பதுவே - மண்ணில்
பிறந்த மனிதர்கள் தம்வாழ்வில் எய்தும்
சிறந்த பயனென்னும் நூல்.

56. இன்னாரென் நண்பர் இனியர் எமக்கிவர்
முன்னாளில் ஒன்றாய் திரிந்திருந்தோம்; - என்றுநண்பர்
சொல்லும் வகையினில் சான்றோனாய் வாழ்பவர்க்கு
வெல்லும் பொருள்வேறொன் றில்.

57. மண்குளிரப் பெய்த மழையாகத் தோழன்நான்
கண்குளிரக் கண்ட கனவுகளை உண்மையாய்
மாற்றிவிட்டான்; பேதமின்றி அன்புசெய்த தோழியெனை
ஆற்றுவித்தாள் தாயாகத் தான்.

58. கேலிசெய்து என்னைப் பரிகசிப்பான்; வேறெவரும்
கேலிசெய்தால் சண்டை பிடித்திடுவான் - பாலியத்தில்
சேர்ந்துசெய்த சேட்டைகள் அத்தனையும் இன்றும்உட்
கார்ந்துசொல்லக் கேட்பான் சிரித்து.

59. செய்யும் தொழிலில் புதுமை படைப்பதும்
உய்யும் வகையில் நெறிதனை சேர்வதும்
நேர்ந்த கடமையை நன்றாய் நிகழ்த்துவதும்
தேர்ந்தநன் நட்பால் வரும்.

60. முதிர்ந்த கனிகிளையைக் கைவிட்டு தானாய்
உதிர்ந்து விழுவது போலே - அதிர்ந்தும்
நடவாத நண்பரைக் கீழோர் பிரிந்து
நடப்பதும் தீங்கில்லை நன்று.



அன்னை மடி

அறிமுகம்

அன்னைத் தமிழுக்கு ஆயிரம் ஆயிரம் பிள்ளைகள். தாய்க்கு தன்னாலான பொன் நகைகளை அணிவித்து மகிழும் பிள்ளைகளைப் போல தத்தம் கல்விக்கும், புலமைக்கும் தக்கவாறு நூலணி செய்து தமிழன்னையை மகிழ்விக்கும் பிள்ளைகளும் ஆயிரமாயிரம். எனது 'மகளாற்றுப்படை' நூலை வெளியிட்டபின் தந்தை மகள் பாசத்தை போல அன்னை - மகன் பாசமும் முக்கியமானது. அதைக்குறித்தும் பாடலாமே என்று நண்பர்கள் பரிந்துரைத்ததை ஏற்று தாய்ப்பாசம் குறித்து 'அன்னை மடி' என்கிற இந்த வெண்பா நூல் இயற்றப்பட்டுள்ளது. சிறு வயதில் பாடல் புனையும் ஆற்றலில்லாத மகன், தனது இனிய இளமை காலத்தில் தாயிடம் பெற்ற பாச உணர்வுகளை பெரியவனானபின் எண்ணி மகிழ்வதாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

வெண்பாக்களைச் சீர்படுத்திச் செம்மையாக்க உதவிய நண்பர் தேவிகாபுரம் கா.லோகநாதன் அவர்களுக்கும், தாய்ப்பாச உணர்வு என்னுள் இன்றும் நிலைபெற்றிருக்கத் தூண்டுதலாக விளங்குகின்ற அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை மேல்நிலைப் பள்ளியின் மேனாள் தலைமை ஆசிரியர், என் தமிழம்மா பே.ஜெயக்கொடி அவர்களுக்கும், அழகானதொரு அணிந்துரை வழங்கிய தமிழ்க்குமரர் தேனி ச.ந.இளங்குமரன் ஐயா அவர்களுக்கும் எனது அன்பான நன்றியைப் பதிவு செய்வதில் மகிழ்கிறேன்.

உலகமெனும் நாடக மேடையில் நாளும்
பலவேடம் கட்டிநடித் தாலும் - விலகாமல்
என்னோடு கூடவரும் நல்மகனாம் பாத்திரத்தை
இன்தமிழால் பாடவந்தேன் நான்.

- ச.கந்தசாமி

அனைவரையும் நெகிழவைக்கும் அன்னைமடி

உலகில் தாய்மையைப் போற்றாத இலக்கியங்கள் இல்லை என்றே சொல்லலாம். அதிலும் குறிப்பாகத் தமிழ் இலக்கியங்களைப்போல் தமிழர்களைப்போல் தாய்மையைப் போற்றிய இலக்கியங்கள் உலகில் பேரளவில் இல்லையென்றே சொல்லிவிட இயலும். அதைப்போல உலகில் எந்த உறவுக்கும் ஈடாக முடியாத, ஒப்பேதுமில்லாத பாசம், அன்னை - மகன் பாசம்.

தாயின் மடியே குழந்தைக்கு முதல் உலகமாகும். தாய்மடியில் இருந்தபடியே உலகத்தை அறிவதற்கான முதற்பயணத்தைக் குழந்தை தொடங்குகிறது. தாயின் அன்பு, அருள், நேசம், பாசம் போன்றவை மகனை மட்டுமல்ல, சமுதாயத்தையே ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் பேராற்றலாக விளங்குவதை அன்னை மடி என்னும் இந்நூல் அருமையாக விளக்குகிறது.

"அன்னை மடி" எனும் இந்நூலின் ஆசிரியர் ச.கந்தசாமி அவர்களின் சொந்த ஊர் விருதுநகர் மாவட்டமாக இருந்தாலும் எங்கள் தேனி மாவட்டத்தின் செல்லப்பிள்ளை. உயர்ந்த பதவியில் இருந்தபோதும் தன்னுடைய அதிகாரத்தைத் துறைசார் அலுவலர்களிடம் மட்டுமே அன்பாகப் பயன்படுத்தியவர். பொதுமக்கள், இலக்கியவாதிகள் சமூக சேவையர் எனப் பலராலும் விரும்பிப் பாராட்டப்படுபவர். நிறைந்த படிப்பாளர், நேரிய சிந்தனையர்.

தேனி வையைத் தமிழ்ச்சங்கம், வாசிக்கலாம் வாங்க., திருவள்ளுவர் மன்றம் உள்ளிட்ட பல இலக்கிய அமைப்புகளில் கலந்துகொண்டு இலக்கிய உரை வழங்கிய பெருமைக்குரியவர். தேனி மாவட்டத்தில் உள்ள ஊர்ப்பெயர்களை ஆங்கிலத்தில் முறையான ஒலிபெயர்ப்பு செய்யும் பணியில் நான் ஈடுபட்டபோது ஏற்பட்ட இந்நல்லாரின் நட்பும் தொடர்பும் என்றும் தொடரும்.

நூலாசிரியர் தந்தை மகளின் பாசத்தை மகளாற்றுப்படை எனும் நூல் மூலம் வெண்பாக்களால் விளக்கியவர். தாயன்பின் சிறப்பையும், அவளது நேசம் மகனின் வாழ்க்கையில் விளைக்கும் அருமைமிக்க மாற்றத்தையும் அன்னையின் பாசம் எந்த அளவுக்கு மகனை வடிவமைக்கிறது, மகன் அந்தப் பாசத்திற்குத் தகுந்த அர்ப்பணிப்புடன் இருப்பதன் தேவை என்ன என்பதையும் மிக ஆழமாக அன்னை மடியில் வெளிப்படுத்துகிறார். அன்னையை தெய்வத்தாய் என 6 ஆம் பாடலிலும் அம்மாவின் சேலை மகனுக்கு எவ்வாறெல்லாம் பயன்படுகிறது என்பதை 16 ஆம் பாடலிலும் நம் கண்முன் நிறுத்தும் நூலாசிரியர் 22 ஆம் பாடலில் தாயின் பிரிவைச் சொல்லிக் கலங்க வைத்து விடுகிறார். மகனுக்கு உண்டான துன்பம் நீங்க தாய் துணியில் காசு முடிந்து நேர்த்திக்கடன் போட்ட செய்தியைச் சொல்கிறது 39 ஆம் பாடல். இது ஒவ்வொருவர் வாழ்விலும் இன்றும் நடந்துவரும் நிகழ்வு. தாயன்பின் வெளிப்பாடு.

48. நாடுகின்ற போதெல்லாம் நன்மையே தந்திடும்;
சூடுபட்டு வாழ்க்கையில் துன்பமென்று - வாடும்போ(து)
எல்லாம்நான் ஆறுதலைத் தேடிவரும் ஓரிடம்
அல்லவா **அன்னை மடி**.

நாடும்போதெல்லாம் நன்மைதரும் வாடும்போதெல்லாம் வாட்டம் போக்கி ஆறுதல் தரும் அதுதான் அன்னை மடி எனும் இப்பாடலின் இறுதிச்சீர் 'அன்னை மடி'. இதுவே நூலின் தலைப்பு.

இந்நூல் இலக்கியம், வாழ்க்கை மற்றும் உண்மை நிகழ்வுகளின் ஒளியால் ஒளிர்கிறது. தாயின் அன்பும், மகனின் உணர்வும் எவ்வளவு ஆற்றல் வாய்ந்தவை என்பதை நினைவுபடுத்தும் நூலாக இது அமையும்.

அன்னை மடி எனும் அருமையான இந்நூலை பலமுறை முழுதும் படித்து நெகிழ்ந்துவிட்டேன். தாயன்பின் பெருமையை, மேன்மையை உணர்ந்தவன் என்ற அடிப்படையில் இந்நூலாசிரியர் திரு ச.கந்தசாமி அவர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். "அன்னை மடி" நூல் வாசகர்களின் உள்ளத்துக்குள் உறுதியாக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, அனைவரையும் நெகிழவைக்கும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. தாய்மை எப்போதும் தங்கத்துக்கு மேலானது, தெய்வத்துக்கு நிகரானது. அந்தத் தாய்மடியின் வெப்பம் நமக்குள் நெகிழ்வை உருவாக்கும்.

நூலின் பயணம் சிறப்பாக தொடர வாழ்த்துகள்!

முனைவர் **புலவர் ச.ந.இளங்குமரன்**
நிறுவுநர் வையைத் தமிழ்ச்சங்கம், தேனி, நாகலாபுரம்
பேச: 98423 70792

அன்னை மடி



1. கண்ணில் தெரிகின்ற காட்சியாய், முன்தோன்றி
மண்ணில் உலவுகின்ற தாய்மொழியாய், - பண்ணில்
உறைந்திருக்கும் உள்ளுணர்வாய், செந்தமிழர் எம்முள்
நிறைந்திருக்கும் தாயெமக்குக் காப்பு.

2. இலக்கியமாய்த் தோன்றி, இலக்கணமாய்த் தாங்கி,
உலகனைத்தும் தாயாகிக் காத்தாய்; - நிலமும்
பொழுதுமாய் நின்ற முதலே, தமிழே
வழுத்துகின்றோம் எம்மையும் கா.

3. ஆக்குவதும், ஆடுகின்ற பேர்களை இல்லாமல்
போக்குவதும் நீயே; தமிழினத்தைக் - காக்கும்
கதிரே, புவியே, மழையே எனக்கும்
கதியே வழாங்குதா யே.

4. ஈன்ற பொழுதில் மகிழ்ந்தாயோ இல்லையோ?
ஆன்ற பொருள்நிறைந்த உன்பெருமைத் - தோன்றும்
வகையினிலே பாமாலை சாற்றவந்தேன்; தாயுன்
நகைமுகத்தால் காப்பாய் உவந்து.

5. நானென்ற ஒன்றின்றி நீயென்ற ஒன்றாய்த்தான்
நானன்(று) உனக்குள் வளர்ந்தேனாம் - நானென்ற
ஒன்றின்றி பத்துமாதம் சென்றவுடன் நீயீன்ற
ஒன்றாய்ப் பிறந்தேன் நிலத்து.

6. அன்னையென் பாரென்னை அன்போடு அணைத்தவரை;
தன்னையே பாலாக்கித் தந்தவரை; - என்னையும்
பிள்ளையென் றாளாக்கி விட்டவரை, நான்கண்டேன்
தெள்ளுதமிழ் தெய்வமாய்த் தான்.

7. பெற்றெடுத்தாய்; பேர்கொடுத்தாய்; மற்றவர்முன் பெற்றியுடன்
கற்றவனாய் நிற்கும் வகைசெய்தாய்; - பற்றெலாம்
நீங்கிப் பரமபதம் உற்றாலும் நாயேனை
நீங்காது தாயுன் தொடர்பு.

8. மாரிலெனைத் தாங்கியமு தூட்டி, மகனெனப்
பேரிட்டுப் பொன்போலச் சீராட்டும் - பாரில்
உயர்ந்தவளை, அன்னை யெனச்சொல் வதொன்றும்
பெயர்ச்சொல்லாய் அல்ல வினை.

9. எண்ணெய் தடவிய உன்விரல்கள் கொண்டுகளி
மண்ணை வனைந்தது போலஉன் - எண்ணம்போல்
என்முகத்தை ஏதமில்லா பிஞ்சுடலை நீவிவிட்டு
என்வடிவம் வார்த்தெடுத்தாய் நன்கு.

10. கண்ணின் மணியேயுன் கண்ணுறக்கம் காணலையோ?
மண்ணின் மதியேநீ தூங்கலையோ? - என்றிசைக்கும்
அம்மாஉன் தாலாட்டைக் கேட்டபடி தொட்டிலிலே
சும்மா கிடத்தல் சுகம்.

11. அத்தை யடித்தாளோ அல்லிப்பூச் செண்டாலே!
அத்தை மகவரட்டும் தந்திடலாம் வட்டியோடே!
பாட்டோடு பாட்டாக சொந்தமதை சேர்த்திடநீ
போட்டுவைத்த பாதைசெல் வேன்.

12. அம்மாயென் றென்னை அழைக்கப் பிறந்தவனே
பெம்மானே! பேரெடுத்து நாடாள வேண்டுமென்றாய்;
அம்மாவுன் ஆக்கினையை என்கடமை ஆக்கிடுவேன்,
செம்மாந்த மண்ணிதனைக் காத்து.

13. பாலூட்டிச் சீராட்டி அன்பொழுகப் பாராட்டித்
தாலாட்டுப் பாட்டிசைத்து வானத்தில் - மேலாடும்
வெண்ணிலவு காட்டி அமுதூட்டும் அன்னையுன்
தண்ணளிக்கு உண்டாமோ ஈடு?

14. ஆட முடியாது மெல்ல அசையவும்
கூட முடியாது; தாலாட்டுப் - பாடலைப்
பாடியன்னை தூளியை ஆட்டிவிட்டால் நானிருகண்
மூடிக் கிறங்கிடு வேன்.

15. யாரும் துரத்திவந்தால் ஓடி ஒளிந்துகொண்டு
நேரும் நிகழ்வுகளைக் காணுமிடம்; - பேரும்
அறியாப் பருவத்தில் நானிருந்து ஆண்ட
அரியணைதான் உந்தன் இடுப்பு.

16. ஒன்றா யிரண்டா அவதாரம் ஆயிரம்,
அன்றாடம் தாயணியும் சேலைக்கு; - நன்றாய்த்
தலைதுவட்டும், தொட்டிலுமாம்; வானம் இடித்து
மழைவந்தால் காக்கும் குடை.

17. ஒட்டுத் துணியும் அணியாமல் கொஞ்சமும்
வெட்கமோ கூச்சமோ இல்லாமல் - ஒட்டுப்புல்
போலநான் உன்காலைச் சுற்றிவந்து வீடிருந்த
காலமின்று மீண்டுவரு மோ?

18. தடுக்கிநான் கீழே விழுந்துவிட்டால் தூக்கி
விடுவாள் விரைந்துவந்து; அன்னைபின் மந்திரம்
சொல்வாள்; பறந்தோடிப் போகும் வலிநோவும்
எல்லாமும் எங்கோ மறைந்து.

19. ஆடுகையில் நான்விழுந்தால் தண்டனை மண்தரைக்கு;
ஓடுகையில் எல்லாமுன் கண்காப்பு; - நாடுகையில்
எல்லாம் அணைத்தெனக்குத் தந்திட்ட முத்தங்கள்
அல்லவா இன்றென் உயிர்.

20. சேட்டைகள் செய்வானுன் சொல்பேச்சு கேளாதான்,
ஆட்டமாய் ஆடி அடங்கவே - மாட்டான்;
படியாத அண்ணனைத் தள்ளியம்மா உந்தன்
மடியிலென்னைத் தூங்க விடு.

21. தப்பெதுவும் செய்திருந்தால் தண்டனைநான்(கு) அடிகூட
தப்பாமல் வைத்துவிடு) அம்மாநீ - எப்போதும்
என்னுடன் பேசாமல் மட்டும் இருக்காதே;
சின்னமனம் தாங்காதம் மா.

22. என்னைத் தவிக்கவிட்டு எங்குதான் சென்றாயோ?
அன்னையே; எப்போது வந்திடுவாய் - உன்னோடு)
எனைசேர்ப்பா யென்றுநான் கண்ணீர் மழையில்
நனைவதைக் காணவில்லை யோ?.

23. சொன்னதைக் கேட்பேன், படிக்காமல் ஊர்சுற்றி
என்றுபேர் வாங்கமாட்டேன்; வேறெதுவும் - என்னைச்சொல்;
என்மகனன் றுன்னைத் தவிட்டிற்கு வாங்கினேன்
என்றுமட்டும் சொல்லவேண் டாம்.

24. தவமிருந்து என்னைநீ பெற்றதாய்ச் சொன்னாய்;
அவமில்லா நன்மகனே என்றாய்; - பவமன்றோ
தன்மகவைத் தாய்தான் அடிப்பதுவும்; வேண்டுமாயின்
என்தலை நோகாமல் கொட்டு.

25. கதைசொல்லிக் கன்னத்தில் முத்தமிட்டுத் தூங்கவைப்பாய்;
விதையாய் விழுந்தனவுன் சொற்கள்; - கதையென்றும்
கற்பனை யென்றும் உதறாமல் உன்சொல்லை
கற்கோட்டை யாய்மாற்று வேன்.

26. நன்றாய்நான் பாடுவதாய் யாருனக்குச் சொன்னார்கள்
என்றெனக்குத் தோன்றவில்லை, நூறுமுறை - அன்றாடம்
கண்டவர்கள் அத்தனை பேரிடமும் சொல்கின்றாய்;
கண்படப் போகுதம் மா.

27. திட்டமிட்டுன் சொல்லைநான் மீறுகையில் கோபத்தில்
திட்டுவதும், செல்லமாய்நீ என்முதுகில் - தட்டுவதும்,
பொல்லா தவனேயென் றென்தலையில் கொட்டுவதும்
நல்வரமாய்க் கொள்வேன் மகிழ்ந்து.

28. பள்ளிமுதல் நாளில் எழுத்தெண்ணி என்பெயரைத்
தெள்ளு தமிழில் எழுதியபின் - சொல்லிக்
கொடுத்த குருவிடம் தாய்பெயரைக் கற்றுக்
கொடுங்களென்று கேட்டேன் அடுத்து.

29. அம்மா உனையெனக்கு ரொம்பப் பிடிக்குமென்று
சும்மாசும்மா சொல்கின்றாய்; சொல்லெனக்கு - அம்மாவை
எவ்வளவு கண்ணா பிடிக்குமென்றாய்; வான்காட்டி
அவ்வளவு தானென்றென் நான்.

30. கனிவைக் கொடுக்கும்; பணிவைப் பழக்கும்;
பனிபோல் குளிர்ந்திடும்; தேனாய் - இனித்திடும்;
எம்மாம் பெரிய செயலையும் செய்விக்கும்
அம்மா எனும்ஒற்றைச் சொல்.

31. அன்பால் அரவணைப்பால் பாசமிகு நற்பண்பால்,
தன்பால் எனைஇழுப்பாள் என்அன்னை; - என்பால்
மகனென்ப தல்லாமல் தன்இயல்பால் என்னை
மிகநன்றாய் காப்பாள் மகிழ்ந்து.

32. நேற்றைப்போல் இன்றிரவும் உண்ண உணவில்லாப்
பேற்றைநாம் பெற்றிட்டோம் ஆயினும் - காற்றைக்
குடித்துக் களித்திருப்போம்; அம்மாவுன் அன்பைக்
கடித்து பசியாறு வோம்.

33. நெருப்பாய் கொதிக்கும் நெடுஞ்சாலை தன்னில்
இருக்கின்ற உன்னொரு சோடிச் - செருப்பைக்
கழற்றிஎன் கால்களுக்கு தந்திட்ட தாயுன்
கழலுக்கு காண்பேனோ ஈடு.

34. உண்டு நிறைந்திடுவேன் அம்மாவுன் கைச்சமையல்;
கண்டு நிறைந்திடுவாய் என்னுதரம் - உண்டு
பெருப்பதை; என்றென்றும் தாயேவுன் அண்மை
இருப்பதேயென் வாழ்வில் நிறைவு.

35. தாயென்று சொல்வதெனைப் பெற்றதால் மட்டுமல்ல;
நீயன்பைக் காட்டிபல சொந்தங்களை - நேயமுடன்
சேர்த்துறவாய் வாழ்ந்திடச் சொன்னதா லன்றோநான்
வேர்விட்டு நிற்கின்றேன் இன்று.

36. குளிப்பாட்டி ஆடை அணிவித்த பின்நான்
அழிச்சாட் டியம்செய்து, கண்ணீர்த் - துளிர்க்க
அழுதாலும், பள்ளியுள்நீ தள்ளியதா லன்றோ
எழுத்தறிந்து கற்றவனா னேன்.

37. ஓடிப் பரிசுபெற வேகமாய்ப் பந்தயத்தில்
ஓடிவரச் சொல்கின்றாய் அம்மா:நான் - ஓடிப்போய்
ஏதேனும் ஆகாமல் மெல்லப்போ என்றுசொன்னால்
ஏதுசெய்வேன் ஒன்றெனக்குச் சொல்.

38. காய்கறியோ இல்லை, பலசரக்கோ தந்ததில்லை,
வாய்ருசியாய் நானுண்ட பண்டங்கள்; - தாய்மனமாய்
நீயிருந்து அன்பைக் கலந்தெனக்குத் தந்ததால்
வாயிருக்கும் பிள்ளையா னேன்.

39. நல்லவிதமாய் வாழென வாய்ச்சொல்லால் சொல்லவில்லை;
நல்லவிதமாய் வாழ்ந்துவந்தாய்; ஊர்மக்கள் - எல்லோரும்
நன்னிலை பெற்றிட வேண்டியபின் தான்சொல்வாய்
என்மகனும் வாழவேண்டும் நன்கு.

40. அள்ளி எடுத்தால் அறிந்திடு வாயென்று
கிள்ளியெடுப் பேன்உன் சிறுவாட்டு - வெள்ளியை;
கள்ளமெலாம் கற்றதும் உன்னிடம் தானம்மா
வெள்ளந்தி போல்நான் நடித்து.

41. நோயினால் வாடியயென் நோய்தீர நேர்ந்துகொண்டாய்;
வாயினால் சொன்னதுடன் நில்லாமல் காசினைக்
கட்டி முடிந்துவைத்தாய்; தாயேவுன் எண்ணமன்றோ
முட்டியெழச் செய்ததென்நோய் தீர்ந்து.

42. என்குணத்தால் இல்லைநான் நல்லபெயர் பெற்றதம்மா;
உன்பெயரைச் சொல்லி இவள்மகனா - இன்னாத
செய்துவிட்டான் என்றூரார் உன்னை அவமதிப்பு
செய்துவிடக் கூடாதே என்று.

43. மண்புழுவைக் கண்டுநான் பாம்பென அஞ்சியதால்
மண்புழுவைக் கையில் எடுத்தெனக்கு - உண்மை
அறிவித்தாய் அம்மாநீ கல்லா விடினும்
அறிவுதந்தாய் பட்டறிவால் தான்.

44. அப்பா எனையடித்து விட்டதற்கா கோபித்துநான்
அப்பத்தை உண்ணாமல் வைத்துவிட்டேன்? - எப்போதும்
முன்வந்து காக்கின்ற நீயேன் தடுக்காமல்
இன்றென்னைக் கைவிட்டாய் சொல்.

45. உன்னருகில் நானிருந்தால் தப்பனைத்தும் மாற்றிடுவேன்;
உன்நிழலில் வாழ்ந்திருந்தால் எப்பகையும் - வென்றிடுவேன்
உன்சொல்லே என்வழியின் வான்விளக்கு; தாயேவுன்
இன்சொல்லே எந்தன் வழக்கு.

46. தேடுகின்றார் எங்கெங்கோ வாழ்நாளை வீணடித்து;
தேடுகின்ற மாந்தரைநான் கேட்கின்றேன் - தேடுவது
எல்லாமுன் தாயவளின் காலடியில் உள்ளதைநீ
கல்லாத காரணமே இஃது.

47. என்சுக மெல்லாம்தன் சொந்த சுகமாக
என்தாய்தான் கொண்டிருந்தாள் தன்வாழ்வில்; - தன்சுகத்தை
என்றும் பெரிதாகக் கொண்டதில்லை; என்தாயே
என்றுமெனைக் காத்திருப் பாள்.

48. நாடுகின்ற போதெல்லாம் நன்மையே தந்திடும்;
கூடுபட்டு வாழ்க்கையில் துன்பமென்று - வாடும்போது)
எல்லாம்நான் ஆறுதலைத் தேடிவரும் ஓரிடம்
அல்லவா அன்னை மடி.

49. எக்காலம் உன்வாழ்வில் பொற்காலம் என்கின்றாய்?
எக்கா ரணமுமின்றி ஈன்றெனைத் - தக்கவாறு
ஆளாக்கி விட்டயென் அன்னையின் அன்பொழுகும்
தாளொற்றிச் சென்றநற்கா லம்.

50. ஒருமுகம் என்னை வரைகவென்றால் உந்தன்
திருமுகம் அன்றிநான் எந்த - ஒருமுகமும்
எண்ணவொண்ணேன் தாயே; முகமெனக்குத் தந்தாயென்
எண்ண மெலாம்நிறைந்தா யே.

51. அன்னையார் யென்றென்னைக் கேட்பார்க்கு நான்சொல்வேன்
தென்னகம், செந்தமிழ், இப்புவி - தன்னோடு
என்னையும் உண்டாக்கி விட்டதால் பெண்ணல்ல
அன்னையென் தெய்வமென் பேன்.

52. மெய்நோகப் பெற்றமைக்கு நன்றியெது என்றபோது
பொய்யனெனப் பேரெடுத்தால் வாழ்க்கையில் - உய்வெனக்கு
இல்லை யெனச்சொல்லி ஆற்றுவித்தாய்; தாய்மட்டும்
அல்லைநீ எந்தன் குரு.

53. ஓடுவதும் நண்பர் களுடன் இணைந்துநான்
ஆடுவதும் கண்டு ரசித்திடுவாள் - பாடுவதும்
தூக்கம் மறந்து படிப்பதையும் கூடயென்தாய்
ஏக்கமாய் பார்த்திருப்பாள் நின்று.

54. அன்னையை விட்டுத் தொலைந்தொருநாள் போனேனாம்;
என்னை அடையாளம் கண்டவர்கள் - உண்ணக்
கொடுத்ததை எல்லாம் புறக்கணித்து அன்னை
கொடுங்களெனக் கேட்டேனாம் அன்று.

55. எனைப்பற்றி நாளும் கதைநூறு சொல்வாய்,
சினையுற்ற நாள்முதல் நானும் நினைப்பின்றி
செய்தசெயல் ஒவ்வொன்றைப் பற்றியும்; மெய்த்தவம்
செய்தேன் மகனாய்ப் பிறந்து.

56. இஞ்சி யரைத்ததன் சாற்றைக் குடிக்கவைப்பாள்;
கெஞ்சியழு தாலும் விடமாட்டாள் - கஞ்சிவைத்தென்
அன்னை கொடுத்தபின் காய்ச்சலெலாம் போக்கிவிடும்
அன்னையின் பாச மருந்து.

57. வசம்பால் வளர்ந்தேனா அம்மாநான் உந்தன்
அசலான தாயன்பில் மூழ்கி - வசந்தங்கள்
கண்டேனா; ஏதென்று கேட்டால்நான் வாயினிக்க
உண்மை உரைப்பேன் உவந்து.

58. எந்தன் வளர்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் நீதானே
முந்தியிருக் கின்ற முதல்சாட்சி; - எந்தயிடம்
சென்றாலும் என்விளை யாட்டிற்குத் தாய்ச்சியாய்
உன்னையே கொள்வேன் உணர்ந்து.

59. எங்கெலாம் என்வாழ்வில் அன்புள்ளம் கண்டேனோ
அங்கெல்லாம் தாயேநீ தோன்றுகின்றாய் - இங்கெல்லா
மக்களும் தாயன்பால் பின்னிப் பிணைந்திருந்தால்
சிக்கலேதும் வாழ்வில் இரா.

60. கன்று மடிமுட்டிப் பாலைக் குடிப்பதும்;
சென்றிரை தேடுகின்ற புள்ளினங்கள் - நன்றாய்த்தம்
குஞ்சுகளைப் பேணுவதைக் கண்டபோதும் தாயினன்பென்
நெஞ்சில் நிழலாடும் நின்று.



என்னவனே! என்னவனே!

(பெண்பாற் கூற்று வெண்பா)

அறிமுகம்

காதலும் வீரமுமே சங்கத்தமிழின் உயிர்நாதம். காலந்தோறும் மாறிவரும் சூழலுக்கேற்ப காதலின் உணர்வுகளைப் பல்வேறு வகை பாவினங்களில் கவிஞர்கள் வெளிப்படுத்தி வந்துள்ளனர். அவ்வாறே உணர்வைக் கடத்துவதற்கு கவிஞர்கள் கையாளும் பல உத்திகளுள் ஒன்று நாயகி பாவம். இந்த நாயகி பாவத்தில் களவியல் கால காட்சிகளை வெண்பா வடிவில் சொல்ல முயன்றுள்ளேன்.

இப்பாடல்களைப் பாராட்டி மகிழ்ந்த தேனி வையை தமிழ்ச்சங்கத்தின் இணைச்செயலாளர் பேராசிரியர் பத்மினி பாலா அவர்கள் இத்தொகுப்பிற்கு அருமையானதொரு அணிந்துரை தந்து சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் பதிவு செய்வதில் மகிழ்கிறேன்.

அமிழ்தவள் என்ப தறியா தவரை
தமிழ்மொழிபால் ஈர்க்கவழி பட்டோம் - தமிழ்த்தாயை,
பெண்பால் தனதன்பால் செப்பியநல் சொற்கோர்த்து
வெண்பா விருந்து படைத்து.

– ச.கந்தசாமி

பெண்பால் கூற்றில் அழகியதொரு வெண்பாமாலை

என்னவனே! என்னவனே! என பெண்பால் கூற்றில் அழகியதொரு வெண்பாமாலை படைத்துள்ள நூலாசிரியர் கவிஞர் **ச. கந்தசாமி** அவர்களை வாழ்த்தி மகிழ்கிறேன்.

பக்தி இலக்கியத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தலைவி பாவத்தில் தலைவனாக இறைவனை வைத்துப் பாடிய பாடல்களை எல்லாம் நினைவுபடுத்தி, கண்ணனை சேரத்துடித்த ஆண்டாளின் தவிப்பையும் காதலையும் ஏகமானதாய்த் தொட்டுச் செல்லும்... என்னவனே என்னவனே எனும் இந்நூல் காதலை நேசிக்கும் அனைத்து வயதினரும் படித்து இன்புறக்கூடிய அருமையான பாக்களைக் கொண்டது.

"கைப்பற்றிக் கொஞ்சம் நடந்துவரச் சம்மதித்தேன்.
கைப்பற்றி விட்டதாக எண்ணிஎந்தன் - கைப்பற்றி
நின்ற மருத்தோன்றி வண்ணத்தைத் தன்விரலில்
என்முகத்தில் ஏற்றிவிட் டான்" ...

கனவில் திருமணம் முடித்த ஆண்டாளாய் மருத்தோன்றியை, மருதாணி வண்ணத்தை அவன் விரல் மூலம் என் முகம் ஏற்றினான் என்று சொல்லி, பெண்மையின் நாணத்தையும் காதலையும் ஒருசேரக் கொண்டு வந்திருக்கும் இப்படைப்பு மிகச்சிறப்பு.

இதில் உள்ள பெண்மை மிளிரும் பாக்கள் அனைத்துமே சிறப்பு. பெண் மனதின் ஆழத்தில் ஒளிந்திருக்கும் எண்ணங்களை சமூகத்திற்கு வெளிப்படையாக எடுத்துரைக்க இயலாத, குறிப்பாகத் தன் காதலனுக்கு, தலைவனுக்கு மட்டுமே உணர்த்தும் விதமான

காதல் கலந்த மெல்லிய உணர்வுகளைத் தனக்கே உரிய பாணியில் தலைவியாகத் தன்னைப் பாவித்து கவிஞர் எழுதியிருப்பது கூடுதல் சிறப்பு.

மாலையில் உன்னிடம் வந்துநான் சேரலாம்
மாலையோடு என்றிருந்தேன் நீமறுத்துக் - காலையில்
வந்திடென்றால் ஓரிரவில் நிச்சயமாய் சாவு (இறப்பு) எனக்கு
வந்திடாதா?.....

காதலனுக்கு காதலி அருகில் இருந்தால் வருடங்கள் கூட நிமிடமாகப் போகும். தொலைவில் இருந்தால் நிமிடங்கள்கூட வருடங்களாகப் போகும் என்ற கவிஞர் வைரமுத்து அவர்களின் வரிகளை உள்ளடக்கி தானே காதலியாய் நின்று, ஒருநாள் தள்ளி வைத்தால், தள்ளி வைப்பது எனக்கு நான் சாவது போல் உள்ளது என்று கூறுகிறார் கவிஞர் கந்தசாமி அவர்கள்.

"மான்உலவும் காட்டினில் நின்றிருந்தோம்; என்னிடம்
வான்நிலவைக் காட்டியவன் சொல்கின்றான் - நான்நிலவு
போலே ஒளிர்வதைத்தான் வானம் எதிரொலித்து
மேலே தெரிகின்ற தாம்."

என்று என் காதலன் உரைத்தான் என்று உரைப்பது அருமை. மானைத் தேடி வேடன் வருவது நமது தமிழ் மரபுக்குப் புதிதல்ல. ஆனால் இங்கு மானைத் தேடிய வேடன் பாடவில்லை, அந்த மானே பாடுகிறது இது புதுமை.

"கலைமானை வேடன்தான் தேடிச் - சிலையோடு
வந்ததைப்போல் நானாக வீழ்ந்தேன் அவன் கரத்தில்;
தந்ததைப்போல் இன்னமுதம் பெற்று".....

என்று உரைக்கிறது இப்பாடல். இங்கு மான் பேசுகிறது.

"உறக்கத்தை நாளும் கெடுக்கின்றாய் என்றே
மறக்கத்தான் நானும் முயல்கின்றேன் உன்னை"

என்று காதலனையும் காதலையும் சுமப்பவளுக்கு எங்ஙனம் உறக்கம் வரும்? உறங்க முடியவில்லை என்பதை உரைத்திருக்கும் பாங்குதான் என்னே! இரவில் நிலா ஒளிர்வதைப் போல் நானும் என் காதலுடன் விழித்திருக்கிறேன் என்பது சிறப்பு

என்னவனே என்னவனே எங்குசென்றாய் என்னவனே;
மன்னவனே மன்னவனே வந்துநில்லாய் - மன்னவனே!
மென்பஞ்சாய் காதலெனும் காற்றில்நான் ஆடுகின்றேன்;
உன்நெஞ்சில் வைப்பாய் எனை.

என்று காதலனைப் பற்றிய நினைவுத் தீயில் வேகும் காதலியின் உள்ளக் கிடக்கையை மனதின் எண்ண ஓட்டத்தை அறிந்த காதலியாய் சிறப்பான வெண்பாக்கள் படைத்த நற்கவிஞர், தமிழ்ப் பற்றாளர் மதிப்பிற்குரிய ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்களுக்கு அன்பிற்கினிய வாழ்த்துகள்.

தொடரட்டும் உங்கள் சமூகப் பணியுடன் படைப்புப் பணியும். முத்தமிழாய்ச் சீர்பெற, தமிழ் கூறும் நல்லுலகம் உங்களை ஆகச் சிறந்த கவிஞராகப் போற்றும் என்பது திண்ணம்.

இவண்,

முனைவர் பேரா.முத்தமிழ்ச் சுடர், **சே. பத்மினி பாலா,**

தேசிய கல்லூரி, திருச்சி.

இணைச்செயலாளர், தேனி வையைத் தமிழ்ச் சங்கம்.

என்னவனே!
என்னவனே!



1. சொல்லவில்லை ஏதும் அவனிடத்தில்; உள்ளமது சொல்லத் துடித்ததையும் நாணத்தால் - மெல்லப் புதைத்துவிட்டேன்; என்வியப்பு கள்வனென் கண்ணில் எதைக்கண்டு தொட்டான் எனை.

2. கண்ணைநான் நோக்கினேன்; கள்வனேயுன் கண்ணெனைத் தின்னத் துவங்குவதைக் கண்டுவெட்கி - மண்ணைநான் நோக்குகின்றேன்; பேதையென் உள்ளத்தைக் கூற்றைப்போல் தாக்குதே காமன் கணை.

3. சட்டெனக் கையைப் பிடித்தல் முறையல்ல
விட்டுவிடச் சொன்னேன்; உதறியவன் - பட்டென
விட்டுவிட்டான்; பாவி யிவனிடம் எப்படித்தான்
சுட்டுவதோ பெண்மனதைத் தான்.

4. கைப்பற்றிக் கொஞ்சம் நடந்துவரச் சம்மதித்தேன்;
கைப்பற்றி விட்டதாக எண்ணியெந்தன் - கைப்பற்றி
நின்ற மருத்தோன்றி வண்ணத்தைத் தன்விரலில்
என்முகத்தில் ஏற்றிவிட் டான்.

5. இருக்கின்றாய் என்நெஞ்சில் வாடா மலராய்;
இருப்ப திருக்கும்போ தேயேன் - நெருக்குகின்றாய்
உன்னை நொடிக்குநொடி பார்க்குமாறு; வேறெதுவும்
என்னை நினைக்க விடாது.

6. வாங்கித்தா பூவென்றேன்; வாங்கியவன் தந்ததையென்
பூங்குழலில் வைத்துவிடச் சொல்லிவிட்டேன்; - ஏங்கித்
தவிப்பவனை ஏனடி ஏவல்செய் கின்றாய்;
செவியோரம் செப்பியதப் பூ.

7. பொல்லாத பார்வையால் பார்த்திடுவாய்; நான்பார்த்தால்
கல்லாய்ச் சமைந்ததுபோல் நிற்பாயுன் - எல்லா
நடிப்பையும் நானறிவேன்; தோல்வியின்றி காதல்
படிப்பை முடித்தவனோ நீ.

8. பூனையாய் பின்வந்தென் கண்களைப் பொத்துகிறாய்;
நானையோ வென்று பதறாமல் - யானையைப்
போலிருந்தேன்; உன்னை தவிரயார் என்னிடம்
கேலிசெய்ய வந்திடுவா ரென்று.

9. நடந்திருவர் மட்டும் வருகையில் நானும்,
நடயென்னைத் தூக்கியவாறு) என்றேன் - நடந்தான்;
மிதந்தேன் அவனிரு கைகளில் பூவாய்:
இதந்தான் புரிந்தான் இனிது.

10. வாஅருகில் என்றுசொன்னான்; கையசைத்து சைகையில்
வாஅருகில் என்றழைத்தான் செல்லவில்லை; - வாஅருகில்
என்றவன் கண்ணால் மொழிந்தகணம் தாயவனைக்
கன்றுபோல் சென்றடைந் தேன்.

11. விரல்களைக் கொண்டுதான் எண்களை மாந்தர்
விரல்விட்டு எண்ணி யறிந்தார்; - விரல்களைக்
கொண்டிவன் எண்ணி அறிகின்றான் யாம்மனதில்
கொண்ட விருப்பங் களை.

12. தாகம் உனக்கிலையோ? எந்தன் தகிக்கின்ற
தேகம் கரைந்துருகிப் போனது - மோகம்
பலநாள் வருத்தியதில் தண்ணீராய் வந்தேன்;
நிலவேநீ என்னை அருந்து.

13. காதலையேன் சொல்லால் வெளிப்படுத்த வேண்டுமென
நாதனே என்னிடம் கேட்கின்றாய் - ஆதவனை
நாளும் மறவாமல் வாவென்று சுற்றிவரும்
கோளும் அழைக்குமோ சொல்.

14. நெருங்கி யிருவரும் ஓரிடத்தில் ஒன்றாய்
விரும்பி இணைந்திருந்த போது - திரும்பத்
திரும்பநான் பேசியதால் வாயடைத்தான்; கட்டிக்
கரும்பினிப்பாய் முத்தம் கொடுத்து.

15. என்முகத்தை வெட்கத்தால் மூடி மறைத்தேன்;
என்அகத்தில் உள்ளவன் தன்கரத்தால் - மென்துகிலை
நீக்கிக்கண் பார்த்தே அருந்துகின்றான், என்னுயிரை
பாக்கியொன்றும் வைக்காமல் தான்.

16. ஆயிரம் ஊசிகளைக் கொண்டெனைக் குத்துகிறது
வாயிலைத் தாண்டிவரும் வாடைக்காற்று) - ஆயினும்
காலில்லா உன்நினைவாம் ஊசிகள் குத்தியது
போலில்லை அந்த வலி.

17. எனக்கும் உனக்கும் இடையில் புதிதாய்
கணக்கு வழக்கு இருத்தல் - தனக்கும்
தெரிந்ததாய் பேசுகின்றார்; உன்னை அணைப்பதினும்
பெரிதாய் இனித்த தெனக்கு.

18. அவனும் நானும் தனியிருந்தோம்; நிலவில்
கவனம் குவித்தவன் கேட்டான் - அவளுனக்கு
மூத்தவளா? சொன்னேன், சினந்தவள் ஊருக்கென
பூத்தவள்நான் மட்டும் உனக்கு.

19. சுவருக்குப் பின்னே உறங்குகிறாள் அன்னை,
அவயம் எழுப்பாதே யென்றேன் - தவறைச்
சரியாகச் செய்யுங் கடங்காரன் கத்தித்
தெரிவித்தான் தன்னை மறைத்து.

20. கனவில்நான் வந்தேனாம் முந்நாள் இரவில்;
கனவிலொன்று தந்தேனாம் முத்தம் - கனவில்நான்
தந்ததையே மீளத் தரவேண்டிக் கெஞ்சுகிறான்:
'வந்தபணி செய்ய விடு'.

21. இன்றேனும் நாமிருவர் பங்குகொள்ளும் போரதனில்
வென்றிடத்தான் வேண்டுமென்று எண்ணிவந்தேன்; - இன்றும்
எனதெண்ணம் கண்டுகொண்ட கள்வநீயே வென்று
தனதாக்கிக் கொண்டாய் எனை.

22. சின்னத் தலையாட்டல் போதாதா; என்மீது
மின்னும் சிறுபார்வை வீசாதா? - இன்னும்
கலையாமல் உள்ளதோயென் மீதான கோபம்;
நிலையாக நிற்குமோ ஆறு.

23. எரிதழலாய் காதலென்னுள் நின்றென் உடலை
எரிக்கின்றதே; என்கண்ணைக் கண்டால் - தெரியாதா?
வெந்து தணிவதற்குள் தண்ணீராய் நீயிங்கு
வந்தெனது நோய்தனை நீக்கு.

24. குளிர்நிலத்தில் வந்த கதகதப்பு; பாலை
வெளிர்நிலத்தில் கண்டபசுஞ் சோலை - தளிர்தனை
மண்ணில் உயிர்ப்பிக்கத் தண்ணீரைத் தந்தமழை
உன்னைநான் ஏற்பேன் உவந்து.

25. தீராத நோயில்லை என்னுடல் உற்றது;
வேறேதும் செய்தும் பயனில்லை; - தேராத
அன்னையிடம் யார்சொல்வார் உள்ளதை; என்னவனே
என்நோயைத் தீர்க்கும் மருந்து.

26. உனக்குள் எனதொளியும் உள்ளன்பு கொண்ட
எனக்குள் உனதளியும் சேர்ந்து - மனத்துள்ளே
நின்றாடும் உள்ளுணர்வாய் நாமுணர்ந்து காதலெனும்
குன்றாடும் தென்றலா வோம்.

27. கன்னத்தைத் தொட்டாய் விரல்களால் அம்மம்மா..
என்னத்தைச் சொல்லும் இளநெஞ்சம் - இன்னும்
உனதந்த மின்சாரம் எண்ணத்தில் நின்றே
எனக்கொளியாய் நிற்கின்ற தே.

28. வனம்தாண்டி வான்முட்டும் மாமலைகள் தாண்டி
எனதுயிர் எவ்விடமோ நிற்கும்; - எனதுடலின்
தாகத்தைத் தீர்த்துவைக்கப் பாதையைப் பார்த்திருக்கும்;
மேகமேநீ சொல்வாய் வழி.

29. பொன்னிற் சிறந்ததென்; பெண்மை யுணர்ந்தது;
முன்னம் பிறவியிலும் என்வாழ்க்கை - இன்புற
என்னோ டிருந்தது; பூவினும் மெல்லியல்பால்
என்கையைப் பற்றியவுன் கை.

30. மேகமாய் பெய்தாய்நீ; ஆறாக வந்தெனது
தாகத்தைத் தீர்த்துவைத்தாய்; உள்ளபடி - மோகத்தை
என்னசொல்வேன், கொல்கிறது மெல்லமெல்ல; சட்டென
உன்னணைப்பில் வீழ விரைந்து.

31. எனதுயி ரென்னும் சிறுபம்ப ரத்தை
உனதுற வென்கின்ற சாட்டை - தினந்தோறும்
சுற்றி விடுவதால், நில்லாமல் உன்னையே
பற்றிச் சுழல்கின்றேன் நான்.

32. அடித்து விளையாடு; கொம்பைப்போல் என்னை
ஒடித்து விளையாடு; பல்லால் - கடித்து
விளையாடு; நாளெல்லாம் என்னோடு மட்டும்
விளையாடு போதும் எனக்கு.

33. மாலையில் உன்னிடம் வந்துநான் சேரலாம்
மாலையோ டென்றிருந்தேன்; நீமறுத்து - காலையில்
வந்திடென்றால், ஓரிரவில் நிச்சயமாய் சாவெனக்கு
வந்திடாதா உள்ளதைக் கூறு.

34. மார்பில் மலராய்க் கிடந்தேன் விழிமூடி;
கார்குழலில் கையளைந்து கேட்கிறான் - பார்இவளே
இப்படியே செத்து விடலாமா? ஆமென்றேன்;
அப்படியே ஆகட்டும் நன்று.

35. கண்டன கண்கள் முதல்குற்றம்: சொல்லாமல்
மண்டென கால்கள் அவன்பின்னால் சென்றதும்தான்
குற்றம்; தொடவந்த போதுதள்ளாக் கைகளும்
குற்றம் புரிந்தன வே.

36. போனது போனபடி யங்கே யிருக்கின்றாய்
நானது போன்றிருக்க ஏலாதே - வானமது
திங்களோடு) இல்லா திருக்குமென் வானமேவா
திங்களைத் தீண்ட விரைந்து.

37. வரமாட்டேன் என்றுநான் சொல்லிவிட்டேன் நேற்று;
வரக்கூடா(து) என்கிறதென் நெஞ்சம் - வரவேண்டும்
என்பவனின் எண்ணத்திற் கேற்ப நடக்கிறது
என்சொல்லைக் கேளாத கால்.

38. தொடாதே எனைஎன்றேன், தொட்டவனை நோக்கி;
படாதென்கை என்றபோதும் கையை - விடாமலவன்
அப்படியே வைத்திருந்தான், அங்கிருந்து மாற்றாமல்
எப்படியும் தொட்டிடலாம் என்று.

39. சொன்ன இடத்தில் குறித்ததொரு நேரத்தில்
சொன்னபடி நீவருவாய் என்றெண்ணி - கன்னிநான்
காத்திருந்த போதன்பே நீவராது போனாலும்
பூத்துநிற்பேன் கல்போல் உறைந்து.

40. எத்தனை காவல் இருந்தாலும் என்னவனே
உத்திர வாதமாய் நான்வருவேன் - பத்திரமாய்
என்னைச் சிறையெடுத்துச் சென்றிடுவாய் இவ்வுலகம்
என்னைச் சிறகொடிக்கும் முன்.

41. இத்தனைநாள் ஆனபின்னும் என்னவனைக் காணவில்லை;
பித்தாகி வாடுகின்றேன்; பாசமுள்ள - அத்தானும்
வந்திடும்நாள் யாதெனக் கேட்டுச்சொல்; என்தோழி
தந்திடென் வேதனைக்கோர் தீர்வு.

42. அடித்து விடாதே எனச்சொன்னால், பூவை
ஒடித்து விடாமல் மெலிதாய் - அடித்து
விளையாடு கின்றான்; அதனால்தான் சொன்னேன்
விளையாட்டாய் தள்ளிநில் லென்று.

43. பொய்கைக் கரையினில் நின்றிருந்தேன்; என்னிடம்
பொய்யாய்க் கதைகளைச் சொல்லவந்தான் - பொய்யனே!
போய்விடெனத் தள்ளிவிட்டேன்; என்கனவு மெய்யாகிப்
போய்விடு மென்று பயந்து.

44. மான்உலவும் காட்டினில் நின்றிருந்தோம்; என்னிடம்
வான்நிலவைக் காட்டியவன் சொல்கின்றான் - நான்நிலவு
போலே ஒளிர்வதைத்தான் வானம் எதிரொளித்து
மேலே தெரிகின்ற தாம்.

45. அலையோரம் நானோட பின்னோடி வந்தான்,
கலைமானை வேடன்தான் தேடிச் - சிலையொடு
வந்ததைப்போல்; நானாக வீழ்ந்தேன் அவன்கரத்தில்;
தந்ததைப்போல் இன்னமுதம் பெற்று.

46. என்னவன் இன்னுமெனை நம்பாமல் கேட்கிறான்;
அன்னமே யுன்மனதில் உள்ளேனா? - புன்னகைத்து
முன்னம்யார் வந்தனரோ அன்னவரே எந்நாளும்
என்மனதில் நிற்பாரென் றேன்.

47. உறக்கத்தை நாளும் கெடுக்கின்றாய் என்றே
மறக்கத்தான் நானும் முயல்கின்றேன் உன்னை;
இரவில் நிலவொளிர்ந்து உன் நினைவை தூண்டக்
கரவல் இயலா தெமக்கு.

48. இடையிலவன் கைவைத்துத் தன்னோடு சேர்த்தான்;
இடையில் சிறிதளவும் தன்னால் - நடைபயில
வாய்ப்பில்லாக் காற்றது, மூச்சிரைப்பாய் மாறியென்
வாய்வழியே செல்லும் விரைந்து.

49. கோர்த்திருக்க வேண்டும்நம் கைகள்; எதிரெதிராய்ப்
பார்த்திருக்கத் தான்வேண்டும் நம்கண்கள்; - வார்த்தைகள்
ஏதுமற்று, என்னவனே நாமிருவர் காலநேரப்
போதமற்று சேர்ந்திருப்போம் வா.

50. இத்தனை நேரமாய் உற்றுற்றுப் பார்த்ததென்
சித்திரக் கண்களைத்தான் என்றிருந்தேன்; - கெத்தாகச்
சொல்கிறான், மெல்லுதட்டின் செவ்வரிகள் எத்தனையென்
றல்லவா எண்ணியிருந் தேன்.

51. அந்திமாலை, தென்பொதிகைத் தென்றல், புதுமலர்
சிந்தும் நறுமணம்; பொன்னூஞ்சல்; - முந்திவரும்
கானமென இன்பங்கள் அத்தனையும் என்னவன்
வானவன் நீயின்றி வீண்.

52. வெண்ணிலவாய் நின்றிருந்து என்மனதில் உன்நினைவு
தண்ணளி நல்குமென்று பேதையாய் - எண்ணியே,
கண்ணிமைகள் மூடிவைத்தேன்; என்னுடல் வெந்ததனால்
கண்டுகொண்டேன் வெந்தனல் நீ.

53. சொன்ன இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில்
சொன்னபடி நேற்று வரவில்லை - என்னவன்
மன்னிக்க வேண்டுமென்றான்; தண்டித்தேன் பத்துமுத்தம்
என்னிதழில் தந்திடு மாறு.

54. குற்றமவன் செய்தமைக்கு தண்டிக்கக் கூடாதாம்;
குற்றவாளி என்னைநீ மன்னித்து - குற்றமினி
யேதும் புரியாத வண்ணம்நீ கட்டியணை
போதுமென்றான் பூப்போல் சிரித்து.

55. இதழ்முத்தத் தண்டனையா வேண்டாமென் கின்றாய்;
இதயத்தில் காதலுடன் கேட்டேன்; - முதலில்நான்
மன்னித் தணைத்துவிட்டால் போதுமாம் தண்டனையைப்
பின்னவன் ஏற்பானாம் சேர்த்து.

56. செல்கிறாய் என்பது கூட வருத்தமில்லை;
செல்கிறாய் என்றயெண்ணம் என்னுயிரைக் - கொல்வதற்குப்
போதும்; இருக்கிறாய் எங்கோநீ என்றயெண்ணம்
போதும் நிலைக்குமென் மூச்சு.

57. தொட்டயிடம் எல்லாமுன் தோளென்று தோன்றகண்
பட்டயிடம் எல்லாமுன் பூமுகமும் - கட்டழகும்
முன்னிற்கும்; ஓங்கிவளர்ந் தேன்கொடிநான் உன்னோடு
பின்னிக்கொள் ளத்தான் பிணைந்து.

58. இன்றுநான் உன்னிடம் வந்தவுடன் சொல்லிவிட்டேன்;
ஒன்றுதான் முத்தம் தரவேண்டும் - என்றுதான்;
எண்ணிக்கை வைப்பாய் எனநினைத்தேன்; தொட்டதும்நான்
எண்ணிக்கை விட்டேன் மறந்து.

59. நாளொரு பூகொடுத்து என்னை மகிழ்வித்தாய்;
நாளொரு நற்பெயர் சூட்டி எனைவிளித்தாய்;
எப்படி வேண்டுமென் றாலும் அழைத்திடெனை
இப்படியே பூவாய் அணைத்து.

60. என்னவனே என்னவனே எங்குசென்றாய் என்னவனே;
மன்னவனே மன்னவனே வந்துநில்லாய் - மன்னவனே!
மென்பஞ்சாய் காதலெனும் காற்றில்நான் ஆடுகின்றேன்;
உன்நெஞ்சில் வைப்பாய் எனை.



தமிழே! அமுதே!

அறிமுகம்

அறிவாய் நுழைந்து உணர்வில் கலந்த மொழியே உயிராய் திகழ்வதை வெளிப்படுத்த முயன்றதன் விழைவே என்னையும் கவிஞனாக எண்ணிப் பாடல் இயற்றும் வல்லமையை எனக்கு வழங்கியது. அன்னைத் தமிழை ஆயிரம் பேர் அழகழகாய் பாடியிருப்பினும் தமிழறிந்த நானும் அவள் மடி தவழ்ந்து மகிழ்ந்ததைக் கற்றுத் தெளிந்ததை அதே மொழிவழியே எனக்கு நானே சொல்ல விழைந்ததால் விளைந்தவையே இப்பாடல்கள்.

வெண்பா வழி எனது கருத்துக்கள் வெளிப்படும் போதெல்லாம் அதை நெறிப்படுத்தி, இலக்கணத்தைச் சீர்படுத்த உதவிய நண்பர், கவிஞர் தேவிகாபுரம் கா.லோகநாதன் அவர்களே, இத்தொகுப்பிற்கு அணிந்துரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார். அன்னாருக்கும் எனது தமிழாசான் கும்மிடிப்பூண்டி செந்தமிழ் சோலை நிறுவனர், பேராசிரியர் வ.விசயரங்கன் ஐயா அவர்களுக்கும் என்றும் கடன்பட்டுள்ளேன்

உண்டால் இனிப்பதும் உண்டிவ் உலகத்தில்
கண்டால் இனிப்பதும் காணலாம் - உண்டோ
உரைத்தால் இனித்திடும் ஓர்மொழி என்றால்
உரைப்போம் தமிழமுதைத் தான்.

- ச.கந்தசாமி

தாயும் அவளே
என் தந்தையும் ஆனவள்

'தமிழே! அமுதே!' என்ற பாடல் தொகுப்பு தமிழ்த்தெய்வ வாழ்த்துப் பாடலாக அமைந்துள்ளது. தமிழ்த்தெய்வத்தின் அடியவராக திரு. ச. கந்தசாமி அவர்கள் தன்னை வாழ்விக்கும் தமிழைப் புகழ்ந்தும், தன்னைக் காக்கும்படி வேண்டியும் பல பாடல்களைப் பாடியுள்ளார். தமிழைத் தாயாக பாவிக்கும் கவிஞர் 'நீயே இறை' என்று தமிழை இறைசக்தியாகக் குறிப்பிடுகின்றார். தமிழ்த்தாயின் புதல்வன் என்பதில் அவர் இறும்பூது எய்துகிறார் என்பது அவரது பாடல்களின் வழியாக உறுதியாகிறது. "தாயும் அவளே, என் தந்தையும் ஆனவள்" என்றும் தமிழைக் குறிப்பிடுகின்றார்.

சிவகளை, ஆதிச்சநல்லூர் மற்றும் கீழடி முதலிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சியின் மூலமாக இன்று அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்ட தமிழின் தொன்மை, தமிழனின் வீரம், இரும்பு கால நாகரிகம், வார்ப்பிரும்பின் பயன்பாடு ஆகியவை புலப்பட்டு, உலகிற்கு வெளிப்பட்டு வரும் இந்த தருணத்தில், அத்தகைய வீரத்தமிழின் மகனாக தன்னை இவர் அடையாளம் காணுகிறார். தமிழரெல்லாம் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

*'தமிழே! அமுதே!' என்ற இந்தத் தொகுப்பில் தமிழ் என்ற சொல் மொத்தம் **36** இடங்களில் பயின்று வந்துள்ளது. இது தமிழையும் தமிழர்களையும் குறித்து வந்துள்ளது.*

எம் தமிழ் - பாடல் எண் 9, 11
பைந்தமிழ் - 12
தமிழன்னை - 13
தமிழ் மகள் - 25
இன்பத்தமிழ் - 29
தேன் தமிழ் - 32
பொங்குதமிழ் - 33

என்று பல பாடல்களில் தமிழ் தமிழ் என்று வருவதனை காண முடிகிறது.


மேலும் தமிழ் இலக்கிய வரலாற்றை இவர் பல பாடல்களில் எடுத்து இயம்பியுள்ள விதம் அலாதியானது. அத்தகைய தமிழின் சிறப்பை ஊர்தோறும் நாம் வளர்க்க வேண்டும் என்று விரும்புகிறார். தமிழைப் பரப்ப வேண்டும் என்றும், பல்வேறு மொழிகளில் உள்ளவற்றைத் தமிழில் கொண்டுவர வேண்டும் என்றும் தமிழ்த்தொண்டு புரிய வேண்டிய விதத்தினை விதந்தோதியுள்ளார்.

'தமிழே! அமுதே!' என்ற இந்த தொகுப்பில் உள்ள அனைத்து வெண்பாக்களும் அமுதமாக இனிக்கிறது என்பதில் ஐயமில்லை. இதைத் தமிழர்கள் அனைவரும் அருந்தி, வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கா.லோகநாதன்,

பிரிவு அலுவலர்,
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை.

தமிழே! அமுதே!



1. விண்ணகத்தைக் கொஞ்சம் விளையாட்டாய் கீழிறக்கி
பண்ணனந்தம் பாடப் பொருள்தருவாள்; - மண்ணகத்தில்
வாழ்வார்க்கு ஞான ஒளியாவாள்; தென்தமிழாள்
ஆழ்வாரைக் காக்கும் அமுது.

2. பூவில் எழுகின்ற வாசனைபோல் பல்வகைப்
பாவில் பரிமளிக்கும் பார்முதல்வி; - நாவில்
நடம்புரியும் நாயகிநின் நற்புகழ் தேரின்
வடம்பிடித்துப் பாடவந்தோம் வாழ்த்து.

3. தமிழே! அமுதே! தகைசால் மொழியே!
தமிழோர் திமிரே! தருவாய் - நிமிர்வே;
கதிராய் நிறைந்தாய்; கனிவாய் பொழிந்தே
கதிதா எனையும் கவர்ந்து.

4. மலர்ச்சொல் எடுத்துப்பா மாலை தொடுத்து
பலவகை யாப்பும் பொருத்தி - நிலமிசை
வாடா திருக்கும் வகையில் உனக்களிப்பேன்
வாடாயென் றென்னையேற் பாய்.

5. பண்டிதத் தன்மையில் பாரோர் புகழநலம்
கொண்டிலங்கும் நூல்களில் நிற்பதை - வண்டமிழ்
கோதை விரும்பாள்; குலம்வளர்ப்பாள் கூடிமகிழ்
பேதையர் நாவி லிருந்து.

6. சொல்லும் அவளேயென் சிந்தை யுமவளே
செல்லும் வழியும்நான் சேர்ந்திட - அல்லும்
பகலும் முனைகின்ற வீடும் அவளே;
திகழும் அவளே தமிழ்.

7. கற்றதமிழ் கண்திறந்து காட்சியினை மேம்படுத்தும்;
பெற்றதமிழ் பீடுதரும்; பற்றுவிட்ட - நற்றவத்தார்
உற்றசுகம் என்னவென்று ஊரார்க்(கு) உரைத்திடத்தான்
சொற்றமிழைத் தேர்வார் சிறந்து.

8. பனையில் சுரக்கும் பதநீர் சுவையாய்
நினைவில் சுரக்கும் தமிழே - உனையுள்
நிறைத்தோர் மகிழ்வார் நிலையில் உயர்வார்
மறைத்த மலத்தை யறுத்து.

9. ஏதில்லை எம்தமிழில்; ஏற்றம் தருமெழுத்தும்
தீதில்லா சொற்குவையும்; தேர்ந்தறிஞர் - வாதிட்டுத்
தந்த பொருட்சுவையும், தீட்டியநல் யாப்பணியும்
சொந்தமாகக் கொண்டாள் செறிந்து.

10. எழுவதும் உன்னால்; விழுவதும் உன்மேல்;
தொழுவதும் உன்னால்துன் பத்தில் - அழுவதும்
உன்சொல்; அதனால் உனைமொழியென் றல்லாமல்
என்சொல்வேன்? நீயே இறை.

11. வரையின் திடமும் வனத்தின் புதிரும்
நிரையின் பொழிவும் நினைப்போல் - உரைக்க
எவர்க்குள தாற்றல்; எமைவளர்த்த தாயே!
தவறெனில்சொல் வேனா துணிந்து.

12. பூவிருக்கும் புள்ளிருக்கும் பைந்தமிழ் தோட்டத்தில்
பாவிருக்கும் பண்ணிருக்கும் பாடியோர் - நாவினிக்கும்;
புத்திதரும் தத்துவங்கள் பாங்காய்ப் பொலிந்திருக்க
சித்திதரும் முத்தமிழின் சீர்.

13. கள்ளமில்லா உள்ளம் கனிவுடன் தந்தருள்வாள்;
வெள்ளமென நல்லறங்கள் ஊற்றெடுப்பாள் - வள்ளலென
கற்றவர்க்கு வாரிக் கொடுப்பாள்; தமிழன்னை
உற்றவர்க்கு தேனாம் உணர்.

14. அறங்கள் அணிகலன்; அன்பவளின் ஆடை;
புறமவள் புன்னகை; பாடல் - சிறகாம்
அவளகத்தில்; காற்றாய் அவளிருப்பு நிற்கும்
புவனத்தில் எங்கும் ஒலித்து.

15. கோலொன்றைக் கொண்டு கடப்பதுபோல் நல்வழிக்கு
நூலொன்றை சொல்லென்றால் நான்சொல்வேன் - நாளொன்றில்
ஓர்பாடல் வீதமுன் வாழ்வில் திருக்குறளை
ஓர்ந்துபடி காண்பாய் வழி.

16. சிவனியம் மாலியம் சீர்சமணம் பௌத்தம்
அவனியிலே யுள்ள மதங்கள்- பவனிவர
ஊடகமாய் நிற்பதால் வான்புகழ் கொண்டதமிழ்
பூடகமாய் புன்னகைசெய் வாள்.

17. நெல்வேலி மாமதுரை நல்லூர் புதுச்சேரி
புல்வாய்க் கரைவில்லி புத்தூர் - நெய்வேலி
எங்கேநீ சென்றாலும் அங்குள்ள ஊர்பெயரில்
தங்கத் தமிழ்மணக்கும் பார்.

18. ஒன்றவள்; பேச்சில் எழுத்தில் இரண்டாக
நின்றாள்; இயலிசை நாடகத்தில் - நன்றாக
மூன்றானாள்; சங்கங்கள் நான்குற்றாள்; ஐந்திணையில்
ஊன்றினாள் அன்பின் விதை.

19. ஆறவள்தான் எம்வாழ்வில்; ஏழு தலைமுறைக்கும்
கூறிய எண்தொகையும் கற்றோர்க்குத் - தேறலாம்;
ஒன்பது நல்மணிபோல் நாம்பாடத் தந்திட்டாள்
தென்மகள் பாட்டுகள் பத்து.

20. கண்ணாய் தெளிந்தநற் காட்சியாய் நின்றனள்;
பெண்ணாய்ப் பொருள்நிறை தெய்வமாய் - உண்ணாய்
எனவூட்டும் தாயாய் எமதுயிராய் மெய்யை
இனம்காட்டித் தந்தாள் தமிழ்.

21. நினைவில் மறப்பில் நிகழ்த்தும் உரையில்
கனவில் கவியில் இருப்பாள்; - வினவின்
பதிலும் அவளே பகர்வாள் தமிழே
எதிலும் முதலாய் எழுந்து.

22. ஏனுனைப் பாடுகின்றேன்; ஏனுனைப் பேசுகின்றேன்
ஏனுனை நாளெலாம் ஏத்துகின்றேன் - நானுனைப்
பெற்றதால் அன்றோ பொருள்நிறைந்தேன்; பொற்றமிழே
பற்றிதனால் கொண்டவனா னேன்.

23. மலையொரு பக்கம் வனமொரு பக்கம்
வலையொரு பக்கம் வயலொரு பக்கம்
சுரமொரு பக்கம் திணையெனயிவ் வைந்தும்
மரபினைச் சுட்டும் வழக்கு.

24. பிறப்பால் தமிழனென்னும் பேரொன்றே போதும்
அறப்பால் உளக்கடலில் ஊறும்; - குறட்பால்
அருந்துவதால் நாளும், அடைந்திட்டோம் மண்ணில்
மருந்தெதுவும் வேண்டாத வாழ்வு.

25. யாப்பிற்குள் நின்றுநடம் புரிந்த தமிழ்மகள்
யாப்புடைத்து புத்தொளி வீசினாள்; - தோப்பிற்குள்
தென்றலாய் வந்தசந்த மில்லா புதுக்கவிதை
என்றவகை பாட்டாய் எழுந்து.

26. அழியாப் புகழ்நிறைந்து ஆள்வோர் தமக்கு
வழியாய், இறவாது வாழும் - மொழியாய்
அருந்தவத்தோர் நாடும் ஒளிவெளியாய், சித்தர்
மருந்தாய் விளங்கும் தமிழ்.

27. பொருள்தேடிப் பாரெங்கும் போனவரா னாலும்
மருள்நீக்கும் செந்தமிழைப் பேசி - அருள்சேர்
குணத்தால் அறத்தினைக் கண்ணாகக் காணும்
உணர்வால் தமிழரெலாம் ஒன்று.

28. கூர்ந்த அறிவும் இயற்கைப் புரிதலும்
தேர்ந்த புலமையும் கொண்டிருந்த - ஆர்ந்தநல்
ஞால முதல்மொழியார் கண்டார் முதற்பொருளாய்
காலம் இடமென் றிரண்டு.

29. இயல்புடன் மக்கள் இயம்பும் மொழியும்,
அயர்வை அகற்றும் இசையும் - நயமுடன்
நன்றே உணர்த்திடும் நாடகப் பண்புடன்
இன்பத் தமிழிங்கு மூன்று.

30. ஓடி உலகெங்கும் வாழ்ந்திடச் சென்றாலும்
பாடித் தமிழைப் பரப்புவதும் - தேடியிங்கு
நல்லறிவு நூல்களை நம்மொழிக்கு மாற்றுவதும்
தொல்லறிவு செந்தமிழர் தொண்டு.

31. தானாய் பிறந்தது தானாய் வளர்ந்தது
தானாய் உயர்ந்ததுடன் நீக்கமற - வானாய்
நிறைந்திருக்கும் தேனாம் தமிழை மொழிவதால்
சிறந்திருக்கும் எம்தமிழர் வாழ்வு.

32. உயர்ந்தநற் சிந்தனை உண்மையுடன் நேர்மை
அயர்விலா ஊக்கமு மூட்டி - மயலற
ஞானமும் கல்வியும் நல்கிடும் தேன்தமிழை
வானமென வாழ்த்தி உயர்த்து.

33. வங்கம் கடைந்ததென் பாண்டியன் மீனொன்று
தெங்குவளச் சேரனின் வில்லிரண்டு - பொங்குதமிழ்
பாவேந்தன் சோழன் புலியென இம்மூன்றும்
மூவேந்தர் கொற்றக் கொடி.

34. யார்நீ யெனயென்னைக் கேட்பார்க்கு சொல்வேன்நான்
பார்தோன்றும் போதேயிம் மண்மீதில் - வேர்விட்டு
தான்தோன்றி யாய்ப்பிறந்த தேன்மொழியைப் பேசுகின்ற
நான்தான் விரிந்தயிவ் வான்.

35. வாரம் ஒருகூட்டம் மாதமொரு மாநாடு
நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் - தீரமுடன்
ஒன்றாய் தமிழர்நாம் ஊர்தோறும் கூடியிருந்து
நன்றாய் வளர்ப்போம் தமிழ்.

36. வண்ணவண்ண பூக்களாய் வாசமுள்ள சொற்களைக்
கன்னலன்ன சொற்களைக் கட்டிநல்ல மாலையாய்ப்
பண்ணிசைத்து செந்தமிழில் பாடுவோம்; கேட்பதற்கு
விண்ணிறங்கும் மண்ணை விழைந்து.

37. தாயும் அவளேயென் தந்தையும் ஆனவள்
தேயும் வளரும் நிலவல்ல - பாயும்
ஒளியால் புவியை வளப்படுத்தும் ஞாயிற்
றொளியாய் திகழ்வாள் தமிழ்.

38. தென்மொழி வாழிய! தேன்மொழி வாழிய!
என்மொழி வாழியவே! என்றுமுள - தொன்மொழி
வாழிய! நன்மொழி வாழிய! செந்தமிழ்
வாழிய வாழிய வே!.

39. கொட்டிக் கிடக்கும் கவிதைகள் கோடிகோடி,
வெட்டி எடுக்கலாம் வாருங்கள்; - தட்டியிந்தப்
பொன்னால் அணிசெய்தோ மானால் அதற்கேற்ப
தன்னால் வளையும் தமிழ்.

40. அலையலையாய் என்னுள் எழும்எண்ண மானாய்;
வலையினில் சிக்கிய மீனாய் - கலைவளர்த்த
செந்தமிழே உன்னில்நான் சிக்கிக் கிடக்கின்றேன்
வந்தெனது நாவில் விளங்கு.



நேர் + நேர் = தேன்பா

(சிலேடை வெண்பா 50)

அறிமுகம்

எனது மகளாற்றுப்படை நூலில் குழந்தையையும் குட்டி நாயையும் சிலேடையாகக் கொண்டு ஒரு பாடலும், மாசிலா மலர்கள் (சூஃபி வெண்பா நாற்பது) தொகுப்பில் ஞானியரையும் நாயையும் சிலேடையாகக் கொண்டு ஒரு பாடலும் இடம்பெற்றிருந்தன.

அதையொட்டி இந்த ஐம்பது சிலேடை வெண்பாக்களை இயற்றித் தமிழன்னைக்கு ஆரமாகச் சாற்றியுள்ளேன். தமிழ் இலக்கியத்தில் சிலேடை என்றால் கவி காளமேகம் தான் நினைவுக்கு வருவார். தேர்ந்த நூலறிவும், ஆழ்ந்த புலமையும் கொண்ட காளமேகத்தின் பாடல்களுடன் ஒப்பிட இயலாதென்றாலும். இவ்வெண்பாக்கள் அவரது அடியொற்றி இக்காலகட்டத்திற்கேற்ற எளிய மொழிநடையில் படைக்கப் பட்டுள்ளன. ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பதைப் போல இப்பாடல்களைக் கருதலாம்.

தமிழ் இலக்கணத்தில் சீர்களை அலகிடும் முதல் வாய்ப்பாடு நேர் நேர் தேமா.. அவ்வாறே ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை நேர் என ஒப்பிட்டு சிலேடையாக பாடுகையில் தேன்போன்ற வெண்பா உருவானதைக் குறிக்க நேர் + நேர் = தேன்பா என இந்நூலுக்கு தலைப்பிடப்பட்டுள்ளது.

இவ்வெண்பாக்களை எழுதுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக இம்மண்ணுக்கும், அன்னை மொழிக்கும் கடன்பட்டுள்ளேன். இவ்வெண்பாப் பாடல்களைச் செம்மையாக்க உதவிய நண்பர் கா.லோகநாதன்

மற்றும் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய கும்மிடிப்பூண்டி, செந்தமிழ்ச்சோலை நிறுவனர், பேராசிரியர் தமிழ்ச்சுடர் வ. விசயரங்கன் ஐயா ஆகியோருக்கும் எனது நன்றியினைப் பதிவு செய்வதில் மகிழ்கிறேன்.

கற்பனை நூலெடுத்துக் கன்னித் தமிழ்த்தறியில்,
சொற்சுவைப் பாவாகப் பொங்கிவர - நற்சுவை
யாப்பணிகள் ஊடாகப் பட்டணி நெய்பவனும்
பாப்புனையும் நூலோரும் நேர்.

- ச.கந்தசாமி

இரட்டுற மொழிதலில் இன்கனிச் சுவை.

'சிலேஷை' என்னும் வடமொழிச் சொல்லுக்கு 'இருபொருள்பட பாடப்படும் பாட்டு' என்று பொருள். இதனைத் தமிழ்ப்படுத்திச் சொல்லும்போது 'சிலேடை' என மாறுகிறது. தூய தமிழில் 'இரட்டுறமொழிதல்' என்னும் தொடரால் வழங்கப்படுகிறது. ஆனால் சிலேடை எனக் கூறும் வழக்கமே பெருகியுள்ளது. இச்சிலேடை செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இருவகைப்படும்.

செம்மொழிச் சிலேடைக்கு நேர்+நேர்=தேன்பா எனும் இந்நூலின் முதல் வெண்பாவையே சான்றாகக் காட்டலாம். காவிரியாற்றின் கரையோரத்தில் கட்டியுள்ள கோயிலையும் தேன்கூட்டையும் செம்மொழிச் சிலேடையில் ஆசிரியர் பாடியுள்ளார்.

'கூட்டமாய்க் கூடுவதால்; கூச்சல் நிறைந்ததால்;
வாட்டத்தைப் போக்கும் அருந்தேனைக் - காட்டுவதால்;
காவிரி ஆற்றின் கரையோரம் கட்டியுள்ள
கோவிலுக்குத் தேன்கூடு நேர்.'

-என்பது வெண்பா. கூட்டமாய்க் கூடுவதால் கோயிலில் அன்பர்கள் கூட்டமாய்க் கூடுவார்கள். தேன்கூட்டில் தேனீக்கள் கூட்டமாய் மொய்த்துக் கிடக்கும்.

கூச்சல் நிறைந்ததால் - கோயிலில் அன்பர்களின் பாடல் ஓசையும், வேண்டுதல் ஓசையும் மிகுந்திருக்கும். தேன்கூட்டில் தேனீக்களின் ரீங்கார ஓசை மிகுந்திருக்கும்.

வாட்டத்தைப் போக்கும் அருந்தேனைக் காட்டுவதால் - கோயிலின் கருவறையில் எழுந்தருளி இருக்கும் தெய்வத்தின் தரிசனம் கண்ணிற்கும், மனத்திற்கும் தேனைப் போல் இனிமை தரும். தேனீக்களின் ரீங்காரம் தேன் இருப்பதை நமக்குக் காட்டிக் கொடுக்கும். இவ்வாறாக கவிஞர் ச.கந்தசாமி அவர்கள் சிலேடை அமைத்துச் செந்தமிழ்ப்பா வடித்துள்ளார்கள். இவ்வெண்பாவில் சொல்லோ தொடரோ பிரித்துப் பொருள்காண வேண்டிய அவசியம் இல்லாமல் நேரடியாக இருபொருளையும் வழங்குவதால் செம்மொழிச் சிலேடைக்கு எடுத்துக்காட்டாய் திகழ்கின்றது. இந்நூலில் உள்ள ஐம்பது வெண்பாக்களும் செம்மொழிச் சிலேடையில் அமைந்தவையே.

ஒரு தொடரைப் பிரித்துப் பிரித்து வேறுபட்டப் பொருளைக் கொள்வது பிரிமொழிச் சிலேடை எனப்படும். இரட்டுற மொழிதலில் வல்லவராகிய காளமேகப் புலவர் ஒரு வெண்பாவில் இரட்டுற மொழிதலையும் தாண்டி, மூன்றுற அதாவது மூன்று பொருள் வருமாறு அமைத்துப் பாடியுள்ளார். அவ்வெண்பாவில் வரும் முதல் தொடரை மட்டும் இங்கு காண்போம். சிவனுக்கும், கணபதிக்கும், செவ்வேளுக்கும் பொருந்தி வருமாறு அப்புலவர் பாடியுள்ளார். 'சென்னிமுக மாறுளதால்' என்பது அப்பாடலின் முதல் தொடர். சிவனுக்கு பொருள் கொள்ளும்போது 'சென்னி முகம் ஆறு உளதால்' எனப் பிரிக்க வேண்டும். சென்னியில் கங்கை ஆறு உள்ளது என்னும் பொருள் கிடைக்கும்.

கணபதிக்குச் சொல்லும்போது 'சென்னிமுகம் மாறு உளதால்' எனத் தொடரைப் பிரிக்க வேண்டும். அப்போது கணபதிக்கு மாறுபட்ட ஆனை முகம் உள்ளது எனப்

பொருள் வரும். செவ்வேளுக்கு கூறும்போது 'சென்னி முகம் ஆறு உளதால்' எனப் பிரிக்க வேண்டும். அங்கு முருகனுக்கு ஆறுமுகங்கள் உள்ளன எனப் பொருள் தோன்றும். இப்படி நம் தமிழ் முன்னோர்கள் சொல் விளையாட்டில் சூட்சுமங்களைப் புரிந்து தமிழுக்கு அரிய செல்வங்களைச் சேர்த்தும் பயில்வார் நெஞ்சங்களில் நல்லின்பத்தை வார்த்தும் தொண்டாற்றி யுள்ளனர். அவர்கள் வரிசையில் தற்காலத்தில் கவி வளவர் ச.கந்தசாமி அவர்கள் தம்மையும் இணைத்துக் கொண்டிருக்கிறார் எனப் புகழ்ந்தால் அது பொருத்தமான நற்புகழ்ச்சியே ஆகும்.

இனி ஒருசில பாக்களைக் கண்ணுற்று அவற்றின் சிலேடை நயத்தையும் கவியின்பத்தையும் அனுபவிக்கத் தலைப்படுவோம். தேன் பாவில் பதினோராவது பாடல் அரசனுக்கும் ஆண்டிக்கும் சிலேடை அமையப் பாடப்பட்டுள்ளது.

'பகைசினம் வென்றான்; உலகைக் கடந்தான்;
நகைதனைப் பூண்டான்; ஒளிசேர் - வகையில்
வரந்தனைப் பெற்றான்; வலியோர் வணங்கும்
அரசனும் ஆண்டியும் நேர்'

அரசன், மாற்றார் கொண்ட பகையையும் அவர்தம் சினத்தையும் வென்று அடக்குபவன். உலகில் பல நாடுகளை தன் ஆளுகைக்கு உட்படுத்துபவன். பொன், மணி ஆபரணங்களை அணிபவன். புகழ் பெறுகின்ற வகையில் இறையருளால் கோலோச்சும் வரம் பெற்றவன். வலிமையான சிற்றரசர்களால் வணங்கப்படுபவன். இவை அரசனுக்குரிய தகுதிகள் ஆகும்.

ஆண்டியானவன் மனத்தை அடக்கி ஐம்புலப் பகையையும் சினத்தையும் வெல்பவன். உலகப் பற்றுக்களைக் கடந்தவன். எப்போதும் சாந்தம் தவழுவதால் முறுவல் பூக்கும் முகத்துடன் விளங்குவான். ஞானம் பெருகும் வகையில் இறைவனிடம் வரம் பெறுபவன். தவசிகளும் உணர்ந்து வணங்கக் கூடிய ஞானி - இவை ஆண்டிக்குரிய தகுதிப்பாடுகள். எவனொருவன் தன்னை ஆளக் கற்றுக் கொள்கின்றானோ, அவனே ஆண்டி எனப் பெயர் பெறுவான். இறையருளையும் ஆளத் தலைப்படுவான். இவ்வுலகில் எத்தகைய பெருஞ்செல்வனாய் இருந்தாலும் அவன் உண்மையில் செல்வனாக மாட்டான். தன்னை ஆளும் ஆண்டியே இகத்துக்கும் பரத்துக்குமான நிரந்தரச் செல்வனாய் ஓங்குவான். அதனால்தான் துறவிகளை 'ஆண்டிப் பண்டாரம்' என அழைக்கும் வழக்கம் இருந்தது. 'பண்டாரம்' என்னும் சொல்லுக்குச் செல்வம் என்று பொருள். இன்று பணம் இல்லாமல் ஏழையாகத் திரிபவரை 'ஆண்டிப் பண்டாரம்' எனக்கூறும் நிலை உள்ளது.

அரசனுக்கும் ஆண்டிக்குமான சிலேடையை மிகப்பொருத்தமாக கவிஞர் அவர்கள் அமைத்துள்ளார்கள். 'ஒளிசேர் வகை' என்னும் தொடரும் 'வலியோர் வணங்கும்' என்னும் தொடரும் கவிஞரின் ஆழ்ந்த சிந்தனைப் போக்கையும், ஆய்ந்தெடுத்த சொற்களை இடும் திறத்தையும் வெளிப்படுத்துவனவாய் உள்ளது.

ஒருவரை இகழ்ந்து பேசும்போது 'அவன் எலி' என்றும், மற்றொருவரைப் புகழ்ந்து வாழ்த்துகையில் 'அவன் புலி' என்றும் கூறும் வழக்கம் உள்ளது. ஆனால் நம் கவிஞர் சிறு எலியையும், வலிய புலியையும் நிகராக வைத்துச் சிலேடை செய்திருக்கின்றார்.

‘தடித்தமுடி மீசை யுளதால், இரையைக்
கடித்துக் குதறும் குணத்தால்; பதுங்கிக்
கெலிக்கின்ற தன்மையால்; நீண்டவால் கொண்ட
எலியும் புலியதுவும் நேர்.’

- *என்பது வெண்பா. தடித்த முடி மீசை எலிக்குமுண்டு. புலிக்குமுண்டு. இரண்டுமே தமது இரையை கடித்துக் குதறும் குணமுடையவை. எலியானது வளைக்குள்ளும் வீட்டுப் பொருட்களின் இடுக்குகளிலும் பதுங்கியிருந்து இரை கொள்ளுவதிலும், பூனையிடம் அகப்படாமல் தப்புவதிலும் வெற்றி பெறுகின்றது. புலியானது காட்டுப்புதரில் பதுங்கியிருந்து தன் வேட்டையில் வெற்றி பெறுகின்றது. எலிக்கு நீளமான வாலுண்டு. புலிக்கும் அப்படியே.*

ஒப்பீடு என்பது உயர்ந்த இரு பொருள்களுக்கு இடையிலும் அமையும். தாழ்ந்த பொருள்களுக்கு இடையிலும் அமையும். வஞ்சகமாகப் புகழ்கின்றபோது உயர்ந்ததையும் தாழ்ந்ததையும் ஒப்பவைத்து உவமை கூறி கவிதை செய்வதும் உண்டு. வஞ்சப்புகழ்ச்சியாக பேசும் போது வள்ளுவர் இந்த உத்தியை கையாண்டிருக்கின்றார்.

‘தேவர் அனையர் கயவர் அவரும்தான்
மேவன செய்தொழுக லான்’.

- *என்பது குறட்பா. இக்குறளில் தேவர்களும் கயவர்களும் சமமானவர் என்கின்றார். ஏன் அப்படி சொல்கிறீர்கள் என வள்ளுவரை கேட்டால், அவர் குறும்பாக முறுவலித்து ‘தேவர்களைப்போலவே கயவர்களும் தாம் விரும்பியதனை செய்வதனால் அப்படி சொல்கிறேன்’ என மொழிகின்றார். இதில் வித்தியாசம் உண்டு. தேவர்கள் நினைத்ததை*

அடையும் ஆற்றலும், நினைத்த இடத்திற்கு செல்லும் வல்லமையும் உடையவர்கள். கயவர்களோ விளைவைப் பற்றி கவலைப்படாமல் சுயநலமே குறியாய் கொண்டவர்களாய் இயங்குவார்கள். 'தேவரனையர் கயவர்' என்பது ஒப்புமையாகத் தோன்றி, மேவன செய்து ஒழுகுவதில் வேற்றுமை காட்டப்பட்டுள்ளது. சிலேடையில் ஏதோ ஒரு வகையில் பொருத்தப்பாடு சுட்டப்படும்.

மேற்கண்ட சிலேடை வெண்பாவில் 'தடித்தமுடி மீசை உளதால்' என்னும் தொடரில் எலிக்கும் புலிக்கும் மெய்யறிவுள்ள உறுப்பின் ஒப்புமை கூறப்பட்டுள்ளது. 'இரையைக் கடித்துக் குதறும் குணத்தால்' என்னும் தொடரில் இரண்டுக்குமான வினை அல்லது செயல் ஒற்றுமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியர் உவமையின் கூறுகளாக உரைக்கும் வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகையில் அமைந்த ஒப்புமைகள் சிலேடைப் பாடல்களில் பயின்று வருவதைக் காண முடியும். கவிஞர் கந்தசாமி அவர்களின் வெண்பாக்களிலும் இந்த நான்கு ஒப்புமைகளும் மாறி மாறி வருவதைக் கண்டு இன்புறலாம்.

தமிழ்நாடு அரசின் உயர் அலுவலராக பணிபுரியும் இவர், தமது பணிச்சுமைகளுக்கு இடையிலும் உள்ளத்தைப் பஞ்சு போல கவிதை வெளியில் மிதக்க விட்டுச் சொல்நயமும் பொருட்சுவையும் உவமை நலமும் கற்பனை இன்பமும் வாய்க்கப் பெற்ற வளமான கவிதைகளை வழங்கி வருகின்றார். இவர்தம் படைப்புகளும் தமிழரசியின் இலக்கியக் கருவூலத்தில் வைர மணிகளாய் சுய ஒளி வீசி காணும் இதயங்களைக் கவர்ந்திழுக்கும் என்பது திண்ணம்.

இன்ப அன்புடன்,

புதுக்கும்மிடிப்பூண்டி **வ. விசயரங்கன்**

நேர்+நேர்=தேன்பா



1. கூட்டமாய்க் கூடுவதால்; கூச்சல் நிறைந்ததால்;
வாட்டத்தைப் போக்கும் அருந்தேனைக் - காட்டுவதால்;
காவிரி ஆற்றின் கரையோரம் கட்டியுள்ள
கோவிலுக்குத் தேன்கூடு நேர்.

2. தோன்றிய காலம் தெரியாத காரணத்தால்,
சான்றோர் உயர்ந்தேத்தும் பண்புளதால், - யாண்டும்
அமிழ்தா யிருந்தே உயிர்குலம் காக்கும்,
தமிழ்த்தாய்க்கு ஞாயிறது நேர்.

3. கண்ணில் தெரியாமல் கள்ளம் புரிவதால்;
பண்ணில் நிறைந்திருந்து, காதலர்தம் - எண்ணத்தில்
போதத்தை ஏற்றி விடுவதால், பொல்லாத
காதலுக்குத் தென்றலது நேர்.

4. தன்னை மறைத்திருக்கும்; கற்றோர் அறியநிற்கும்;
துன்பமாம் நோய்தீர்க்கும் துய்ப்பார்க்கு; - முன்னை
வினையறிந்த வைத்தியன் தந்த மருந்தும்
தனையறிந்த ஞானிக்கு நேர்.

5. ஒருகணமும் நில்லாமல் சுற்றிச் சுழலும்;
ஒருவரையும் விட்டு விடாமல் - ஒருசேரக்
கட்டிவைக்கும்; கண்ணில் தெரியாக் கடவுளும்
கட்டில்லாக் காற்றதுவும் நேர்.

6. கனிகொடுக்கும்; தண்ணிழலாய்த் தன்னைக் கொடுக்கும்;
முனிவர்கள் வந்துதவம் செய்யத் - தனித்த
இடம்கொடுக்கும்; அம்மணமாய் மண்ணில்வோர் விட்ட
திடமரமும் புத்தனுக்கு நேர்.

7. ஆண்டவனும் பல்லிளிக்கச் சீண்டுவாள்; மென்மலர்போல்
தீண்டுவாள்; மாலை மயக்கத்தைத் - தூண்டுவாள்;
தென்பொதிகை மாமலையில் தோன்றி வலம்புரியும்
தென்றலுக்குக் கன்னியவள் நேர்.

8. தோகை யுமிருக்கும்; தேகமெலாம் கண்ணிருக்கும்;
ஈகை குணங்கொண்ட வானத்து - மேகம்
விருந்தாக மாமழை பெய்யநட மாடும்
கரும்பும் மயிலதுவும் நேர்.

9. இறைக்க இறைக்கத்தான் ஊற்றெடுக்கும்; தாகம்
குறைப்பதற்கே தானிருக்கும்; போற்றி - இறைத்தால்
உணர்வளிக்கும் ஊட்டமாகும்; பாட்டாளித் தோழன்;
கிணறும் புலவனும் நேர்.

10. ஒருவனுக்கும் சொந்தமில்லை; ஊரெல்லாம் சுற்றும்;
திருடனையும் பேதமின்றி ஏற்கும்; - தெருவோரம்
வீசுகின்ற காற்றைப்போல் தன்போக்கில் போகின்ற
காசுக்குத் தாசியரும் நேர்.

11. பகைசினம் வென்றான்; உலகைக் கடந்தான்;
நகைதனைப் பூண்டான்; ஒளிசேர் - வகையில்
வரந்தனைப் பெற்றான்; வலியோர் வணங்கும்,
அரசனும் ஆண்டியும் நேர்.

12. கொடுப்பது தானென்ற எண்ணமேது மின்றி,
அடுத்தவரைத் தன்னைப்போல் எண்ணிக் - கொடுத்ததற்காய்
தான்எதுவும் வேண்டாது, காலத்தில் பெய்கின்ற
வான்மழை வள்ளலுக்கு நேர்.

13. கண்டால் பளபளக்கும்; கட்டியுன் வீட்டிற்குள்
கொண்டால் புகழ்கொடுக்கும்; தன்மதிப்பைக் - கொண்டதாம்;
மண்ணில் விளைந்தாலும் மாற்றுக் குறையாத
பெண்ணுக்குப் பொன்னதுவும் நேர்.

14. சூதும் தெரியாது; வாதம் புரியாது;
யாதும் அறியாதார் தூற்றினாலும் - ஏதும்
நடவாத தன்மையாய் புன்னகை சிந்தும்,
கடவுள் குழந்தைக்கு நேர்.

15. வண்ணத்தால் பேரெடுக்கும்; தொட்டவரை ஒட்டிவரும்
மண்வாசம் கொண்டு பொலிந்திருக்கும் - பொன்போல;
மாங்கல மென்றவையின் மத்தியில் வந்தமரும்;
மாங்கைக்கு மஞ்சளது நேர்.

16. உழைத்துழைத்துத் தேயினும் வாசலில்தான் நிற்கும்;
பிழைக்கத் தெரியாது கைத்தடிபோல்; நாதன்
விருப்பமின்றி கைவிட்டால் பேசா திருக்கும்
செருப்பும் தியாகிக்கு நேர்.

17. வாசத்தை மோப்பமிட்ட வண்டுகளை ஈர்த்திடும்;
நேசத்தால் துய்க்க மயக்கத்தில் ஆழ்த்திவிடும்;
உள்ளுக்குள் போதை யிருப்பதைக் காட்டாத
கள்ளுக்குக் கன்னியவள் நேர்.

18. முத்தம் கொடுப்பது; முந்தி யிருந்தது;
சத்தம் கொடுப்பது; தள்ளாமல் - நித்தமும்
ஆள்பவரை மேன்மேலும் ஆழ்த்துவது; கத்துகின்ற
ஆழ்கடலும் பெண்தமிழும் நேர்.

19. அன்பினைக் காட்டி அறிவினைத் தந்திடும்;
தன்னலமின்றி சேர்ந்துற வாகநிற்கும்; - முன்னிருந்த
பண்பினை நேர்வழியில் மாற்றிடும்; தோளொத்த
நண்பனுக்கு நூலதுவும் நேர்.

20. பாயும் குணமிருக்கும்; மஞ்சளைப் பூசிநிற்கும்;
மேயும் விழியால்பெம் மானை எதிர்நோக்கி,
தூங்காமல் ராவெல்லாம் காத்திருக்கும், கானுறையும்
வேங்கைக்கு மங்கையும் நேர்.

21. வாசம் நிறைந்திருக்கும்; கூர்முனையால் தற்காத்து
நேசத்தால் பேரெடுக்கும்; மாங்கையரின் - மாசற்ற
போசாக்கில் வாழ்ந்திருக்கும்; காதலைச் சொல்லித்தரும்
ரோசாவும் ராசாவும் நேர்.

22. வெண்மை குணமுடைத்தாம்; வெற்றிலைக்குக் கூட்டாளி;
நுண்மை யறிந்தக்கால் நோய்க்கு மருந்தாகும்;
கண்ணில் குளிர்ச்சிதரும் கண்டவர்க்கு; காரமிக்க
சுண்ணாம்பும் ஞானியரும் நேர்.

23. கறுப்பு நிறத்ததாம்; கூட்டமாய்த்தான் வாழும்;
சுறுசுறுப்பைக் காட்டும்; நடையை - விரும்பும்.
நறுமுகையே நெல்வேலி கட்டியநல் லூர்கட்
டெறும்பது யானைக்கு நேர்.

24. சீறிப் பயம்காட்டும்; சின்னப் படம்காட்டும்;
மாறிமாறித் தன்முகம் காட்டிநிற்கும் - ஏறிவிட்ட
போதிலெல்லாம் நஞ்சுகக்கும்; நல்ல அரசியல்
வாதியும் பாம்புக்கு நேர்.

25. கரையெல்லாம் பூவிருக்கும்; காணயித மாகும்;
வரையதனில் முந்திவந்து பின்னால் - தரைதொடும்;
பேறதற்கு பூமாது போர்த்தும் பொழுதில்தான்;
ஆறதற்கு பட்டணியும் நேர்.

26. பட்டினும் மெல்லியதாய் தொட்டுவிடத் தூண்டுகின்ற
கட்டழகு மேனி; கலைமிளிரும் - பொட்டழகு;
சின்னவிழி; அஞ்சுமொழி; துள்ளல் நடைகொண்ட
கன்னியவள் மானுக்கு நேர்.

27. வாழ்வது வானத்தில்; வட்டமிடும் மேகத்தில் ;
ஆழ்ந்ததன் பார்வையின் ஆற்றலுக்கு - வீழ்ந்திட்ட
சித்துயிரை உண்பதால் உய்விக்கும்; நிம்மலத்தான்
புத்தன் கழுகுக்கு நேர்.

28. இருட்டில் நடமாடும்; மெல்லவே கண்ணை
உருட்டித் திசைநோக்கும்; பார்த்தால் - மருட்டிக்
கடுமையாய்ப் பாய்ந்திடும் கத்தியுடன், பூனைக்
கடுவன் திருடனுக்கு நேர்.

29. வகைவகையாய் உண்ணத் தருகின்ற வள்ளல்;
பகையான வெம்புயலை வெல்லும் - தகையான்;
தனைச்சார்ந்த மக்களைத் தாங்கிடும்தென் சீமைப்
பனையனுக்கு மன்னவனும் நேர்.

30. தடித்தமுடி மீசை யுளதால்; இரையைக்
கடித்துக் குதறும் குணத்தால்; பதுங்கிக்
கெலிக்கின்ற தன்மையால்; நீண்டவால் கொண்ட
எலியும் புலியதுவும் நேர்.

31. தோலை உடுத்திருக்கும்; தொட்டுவிட்டால் கண்நனையும்;
தாளை யுடைத்ததாம்; உற்றறிய - மேலை
உறையை உரித்துரித்துப் பார்த்தாலும் தோன்றா
இறையதற்கு வெங்காயம் நேர்.

32. நீரில் மிதந்திருக்கும்; தன்னாலே தள்ளாடும்;
பாரில் உயர்ந்ததாய் தன்கொடியை - கூறிப்
பிடித்திருக்கும்; மண்தரையில் முட்டிநிற்கும்; கள்ளைக்
குடித்தவனும் கப்பலும் நேர்.

33. பச்சை மரத்தினைப் பட்டமரம் ஆக்கிவிடும்;
உச்சிப் பொழுதில் நிழல்சாயும் - மிச்சமெல்லாம்
மெய்யாய்ப் புழுக்கைதான்; நாளெல்லாம் மேய்ந்துவரும்
வெய்யிலுக்கு ஆடதுவும் நேர்.

34. கண்ணைப் பறிக்கின்ற வண்ணத்தால்; காண்போர்தம்
எண்ணம் மயக்கும் வடிவத்தால்; - மண்ணகத்தை
விண்ணகமாய் மாற்றுவதால்; பூவிரும்பும் பெண்ணுக்கு
வண்ணத்துப் பூச்சியது நேர்.

35. ஒளியாகும் உற்றதைக் கேட்டால் ஒலியாம்;
வளிவழங்கும் ஆற்றலாய், உள்ளே - ஒளிந்திருந்து
நன்மையும் தீமையும் பேதமின்றிச் செய்கின்ற
மின்சாரம் தெய்வத்தின் நேர்.

36. எத்தனைபேர் கண்டாலும் ஒன்றினையேக் காட்டிநிற்கும்;
பித்தனையும் புத்தனையும் பேதமின்றி - குத்தவைக்கும்;
பாடலுடன் ஆடலும் காட்டும் திரைப்படக்
கூடமது ஞாலத்தின் நேர்.

37. மழலை முகத்தால்; மரக்கிளையில் தொங்கி,
பழத்தை விரும்பும் குணத்தால் - இளைய
பருவத்தில் பாலூட்டும் பண்பினால், கள்ளக்
கருங்குரங்கும் வவ்வாலும் நேர்.

38. தலைகால் புரியாமல் தாவிக் குதிக்கும்;
நிலத்திலும் நீருள்ளும் வாழும் - பலமாய்
அவயமிட்டுத் தானே இரையாகும்; துள்ளும்
தவளையும் முட்டாளும் நேர்.

39. நழுவுமாம் தொட்டக்கால்; நாநீளும் கண்டால்;
வழுக்கியதன் வாயருகேச் சென்றால் - விழுங்கிவிடும்;
நல்லபெயர் பெற்றதுவாம்; நெய்நிறைந்த, நெல்வேலி
அல்வாவும் பாம்பதுவும் நேர்.

40. வாலிருக்கும் வாட்டமாய்; வட்டமிடும் அந்தரத்தின்
மேலிருந்து; திட்டமுடன் தன்கையில் - நூலிருக்கும்
பட்டினத்தான் கையசைய தானசையும்; வண்ணமிக்கப்
பட்டம் குரங்குக்கு நேர்.

41. மடலாடும் காற்றினில்; மாங்கலமாய் நிற்கும்;
வடத்தை கழுத்தில் அணியக் - கிடக்குமாம்;
தானையின் காலடியில் கன்றினைக் காத்திடும்
யானையும் வாழையும் நேர்.

42. இப்பக்கம் கூச்சலென்றால்: அப்பக்கம் கொந்தளிக்கும்;
எப்பொழுதும் மாறா வணிகமொழி - செப்பும்;
புனிதமென்றும் நீசமென்றும் பேதமின்றிப் பொங்கும்;
மனிதமனம் சந்தைக்கு நேர்.

43. கரங்கொட்டி காண்போர் மகிழ்ந்திடும்வால் கொண்டான்;
மரத்திற்கு மேலுலவும் மாயன் - மரக்குச்சி
கொண்டுசெய்த கூடுடைத்தான்; சின்ன அணிலுக்கு
வண்ணமிக்க பட்டமது நேர்.

44. கூர்மை உடையதாம்; ஆழமாய் பாய்வதாம்;
பார்புகழ வெற்றி தருவதாம் - தார்சூடி;
வேலிக்குக் காவலாய் நிற்குமிந்த வீரன்கை
வேலுக்கு மெய்யறிவு நேர்.

45. தூணிருக்கும், திண்டு மிருக்கும்; உடையவன்
காணிற்கால் வைக்கப் படியிருக்கும்; - கோணியுள்ள
மேட்டினில் அம்பாரம் தாங்கிநிற்கும்; கோட்டையார்
வீட்டிற்கு யானையும் நேர்.

46. அழைத்தால் உடன்வரும்; காசு கொடுத்தால்
இழைத்தாரென் றெள்ளாமல் இஃதென் - பிழைப்பென்று
போகம் தரும்காசுக் கேற்றபடி; வாடகை
வாகனமும் தாசியரும் நேர்.

47. அச்சும் இருக்கும்; அடுக்கடுக்காய் சட்டங்கள்
மெச்ச யிருக்கும்; படியாத - மச்சானைக்
கண்டிக்கக் கோனிருக்கும்; கொற்றக் குடையிருக்கும்
வண்டியர சாட்சிக்கு நேர்.

48. நின்றால் நடனம்; நகர்ந்தால் நாட்டியம்;
வென்றிதரும் வண்ண வடிவழகு - மன்றத்தில்
யாருக்கும் காண்கையில் கும்பிடத் தோன்றுகின்ற
தேருக்குப் பேரிளம்பெண் நேர்.

49. கம்பத்தில் ஏறுவதால், காற்றிலே யாடுவதால்,
கம்பத்தை சூழ்ந்தவர் யாவரும் - தெம்பாய்க்
கரங்கொட்டி வாழ்த்தும், கழைக்கூத்துக் காரன்
அரங்கக் கொடியதற்கு நேர்.

50. நெடிதுயர்ந்த தோற்றத்தால்; நற்பலன் தந்து
குடியிருக்கும் ஊரின் பெயர்விளங்கச் செய்வதால்;
தேமலிந்த பண்புடைத்தால்; யார்க்கும் வளையாத
மாமலையும் சான்றோர்க்கு நேர்.

மாசிலா மலர்கள்

(சூஃபி வெண்பா நாற்பது)

அறிமுகம்

எனது முதல் நூலான 'சென்பா நாற்பது' நூலில், இந்திய ஞானி ஓஷோவின் ஜென் மரபு குறித்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 40 வெண்பாக்களை இயற்றி இருந்தேன். அதனைத் தொடர்ந்து எது குறித்து அடுத்த படைப்பினை மேற்கொள்வது என்று எண்ணிக்கொண்டிருந்த வேளையில், ஓஷோ ஜென் மரபுக் குறித்துப் பேசிய அளவிற்கு இஸ்லாத்தில் உள்ள சூஃபி மரபு குறித்தும் அதிகமாக விவரித்திருக்கின்றார் என்பது நினைவில் வந்தது.

அந்த அடிப்படையில் சூஃபி மரபு குறித்துப் பல்வேறு நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்து வந்தேன். சூஃபி மரபு குறித்து தெளிவாக உணர்த்தக்கூடிய தமிழ்நூல்களைத் தேடிவந்த நிலையில் நாகூர் ரூமி அவர்கள் எழுதிய "சூஃபி வழி - இதயத்தின் மார்க்கம்" என்ற நூலைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்நூலில் நாகூர் ரூமி அவர்கள் சூஃபி வாழ்வியல் பற்றி விளக்கியுள்ளதுடன், சிறந்த உதாரணங்களையும் அருமையாக எடுத்துக்காட்டியுள்ளார். இப்புத்தகத்தில் எடுத்த குறிப்புகளின் அடிப்படையில் ''மாசிலா மலர்கள்" என்ற இந்த 40 வெண்பாக்கள் இயற்றப்பட்டுள்ளன.

இதன் கருத்துக்கள் சூஃபி வழியை சார்ந்தது. வடிவம் தமிழ்மொழியைச் சார்ந்தது. இவை இரண்டையும் சேர்த்துத் தொகுத்தது மட்டுமே நான் செய்தது. இப்பாடல்களில் வெண்பா இலக்கணத்தைச் சரிசெய்து செம்மையாக்கிய நண்பர் கா. லோகநாதன், தமிழ்ச்சுடர் ஐயா வ. விசயரங்கன் ஆகியோருக்கும்,

நூலாசிரியர் நாகூர் ரூமி அவர்களுக்கும், அணிந்துரை நல்கிய கவிஞர் தாமரைபாரதி (இயற்பெயர் அரவிந்தன், மாவட்ட வருவாய் அலுவலர்) அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏகயிறைக் கொள்கையை ஏற்று, முழுமையும்
பாகமும் ஒன்றெனவே பார்க்கின்ற - தாகத்தால்
மெய்யுணர்ந்த சூஃபியரின் மாண்புகழை வையமெலாம்
உய்ந்திடவே சொன்னேன் பணிந்து.

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்றிரு;
அல்லா ஒருவரே என்பதைக் கண்டிரு;
அல்லாவின் பேரருளைத் தஞ்சமெனக் கொண்டுநாளும்
அல்லாஹூ அக்பரெனக் கூறு.

- ச.கந்தசாமி

நல்மணம் வீசும் மலர்கள் நாற்பது

தற்கால தமிழ்ச்சூழலில் தமிழ்க்கவிதை ஜனநாயகமயப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது கவிதைக்கான நடை உரைநடையை நோக்கி நகர்ந்துள்ளது. இந்த நிலையில் மரபுக்கவிதைகளுக்கான இடம் குறுகியதாகவே உள்ளது. அல்லது மரபுக்கவிதைகள் கொண்டாடப்படவில்லை என்னும் சூழலே நிலவுகிறது.

இத்தகைய சூழலில் மரபிலக்கணத்தின் அடிப்படையில் கவி புனைபவர்கள் குறைவு. யாப்பிலக்கணப் பாவகைகளில் ஒன்றான வெண்பாவில் தற்போது கவிஞர் ச.கந்தசாமி அவர்கள் தனது "மாசிலா மலர்கள்" எனும் படைப்பு மூலம் வந்திருப்பது பாராட்டுக்குரியது.

முதலில் மாசிலா மலர்களின் வடிவம் பற்றி பேசலாம். வெண்பாவின் குறிப்பிடத்தகுந்த வரையறையான இரண்டடி முதல் பன்னிரண்டு அடிகளுக்குள்ளாக ஒவ்வொரு பாடலும் நான்கடிகளைக் கொண்டிருக்கக் கூடிய நேரிசை / இன்னிசை வெண்பாவில் எழுதியிருக்கிறார். (முதல் மூன்று அடிகள் நான்கு சீராய் ஈற்றடி முச்சீராய் அமைவது).

சில பாடல்களில் நான்கடிகளிலும் எதுகையைப் பயன்படுத்தியுள்ளார். சில பாடல்களில் முதலிரண்டு அடிகளில் ஒருவகை எதுகையையும் கடைசி இரண்டு அடிகளில் வேறுவகை எதுகையையும் பயன்படுத்தியுள்ளார்.

பாடல்களில் உள்ள இசைமையும் சந்தமும் வாசிப்போரைத் தம்முள் இழுத்துக்கொள்ளும் வல்லமை கொண்டவை. பழங்காலத்துத் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தாமல் எளிமையான சொற்களைக் கொண்டு அதேசமயம் செறிவான பொருளை வெளிப்படுத்தும் சொற்களைக் கொண்டு பாடல்கள் இயற்றியமை சிறப்பு.

வாசகருக்குப் பாடல்களைப் படிக்கையில் அகராதியோ, அருஞ்சொற்பொருளோ தேவையில்லை. அன்றாடங்களில் பயன்படுத்தும் சொற்களே சிறப்புடன் எடுத்தாளப்பட்டுள்ளன.

மாசிலா மலர்களின் பாடு பொருள் என்ன?.

இஸ்லாமிய மார்க்கத்தின் ஒரு பகுதியான சூஃபித்துவம்தான் பாடுபொருள். நவீன வாழ்வுக்கு ஆட்பட்டு அன்பின்மையும் வன்முறையும் தலைவிரித்தாடும் இப்போதைய வாழ்வில் அமைதியையும் அன்பையும் வலியுறுத்தும் சூஃபி இயக்கம் குறித்துக் கவிஞர் வாசித்த, எழுத்தாளர் நாகூர் ரூமி எழுதிய "சூஃபி வழி-இதயத்தின் மார்க்கம்" நூலின் தாக்கமே இப்படைப்பின் பாடுபொருள்.

அப்புத்தகத்தில் தம்மைப் பாதித்த, உட்செறிவான, உலகுக்குத் தேவையான விஷயங்களை அதன் பொருள் மாறாமல் தம் கவிமனத்தின் பாடல்களாக நாற்பது பாடல்களில் வடித்துள்ளார்.

இப்படைப்பில் பயணிக்கும் வாசகன் பின்வரும் தரிசனங்களைக் கண்டடைவது நிதர்சனம். நான் என்கிற அகங்காரத்தை அகற்றுவது, மலர்ந்த இதயத்தின் வாயிலாக மற்றுமோர் இதயத்தை மலரச் செய்வது, இறையிடம் தன்னை முழுதாக ஒப்புக்கொடுப்பது, மாசுற்ற மனத்தின் மாசு நீக்கியாக இறைவனை உருவகிப்பது, உண்மையான பக்தி உடனடி

நன்மையைத் தருவது, மனமே கோவிலென்பது, துறவின் சிறப்பு, பக்தனுக்கும் இறைவனுக்கும் இடையில் பாலமாகக் குருவைக் கருதுவது, தானென்னும் மெய்யுணர்தல், மெய்யுணரப் புலனடக்கம், அல்லும் பகலும் அல்லாவைக் காணும் மனம் போன்ற சிறந்த தரிசனங்களைப் பாடல்கள் மூலம் தந்திருக்கிறார்.

இஸ்லாமிய தமிழ் இலக்கிய வடிவங்களான, கிசா, கண்ணி, மாலை, நாமா, முனாசாத்து, நொண்டி நாடகம் வரிசையில் வெண்பாவில் எழுதப்பட்ட மாசிலா மலர்கள் ஒரு நல்வரவு.

உமறுப்புலவர், குணங்குடி மஸ்தான், அப்துல் காதர் நயினார் லப்பை போன்ற இஸ்லாமிய தமிழ் புலவர்கள் வரிசையில் கவிஞர் ச.கந்தசாமி அவர்களைச் சேர்க்கிறேன்.

தமிழ்ச்சூழலில் 'மாசிலா மலர்கள்' என்றென்றும் நல்மணம் பரப்பட்டும்.

கவிஞருக்கு மனமார்ந்த பாராட்டுகள்.

- தாமரைபாரதி

சேலம்.

மாசிலா மலர்கள்



1. எல்லையொன் றில்லா ஒருமை அருட்கடலே!
இல்லையென் றில்லாமல் அன்பருக்கு - வல்லமை
நல்கிடும் நாயகமே! உன்னிதய முத்தாகும்
நல்வரம் தந்தருள் வாய்.

2. கனிக்குள் இருக்கும் பருப்பைச் சுவைக்கக்
கனிக்கு வெளியில் இருக்கும் - இனிப்பற்ற
ஓட்டை உடைப்பதைப்போல் நான்என தென்கின்ற
ஓட்டை உடைப்பாய் உணர்ந்து.

3. முத்தாரம் கேட்டிருந்தால் தந்திடுவேன் தோழியிடம்
பத்திரமாய் வந்தடையும் உன்னிடத்தில்; - முத்தம்
தரவேண்டும் என்றால் உனைத்தேடி நேரில்
வரவேண்டும் தானேநான் அங்கு.

4. எரியும் சுடரை அடுத்த விளக்கின்
திரியும் சுடரின் தொடர்பில் - எரியும்;
இதயச் சுடரை அதுபோல் தொடரும்
இதயம் ஒளிரும் இணைந்து.

5. முழுவதும் தன்னை இறையிடம் தந்தோர்
எழுவதும் உண்பதும் கூடத் - தொழுகைதான்;
நெய்வதும் சந்தையில் விற்பதும் உள்மகிழ்ந்து
செய்யும் இறைவணக்கம் தான்.

6. வெண்துகிலில் பட்ட கறையினை நீக்கிட
மண்சவக் காரத்தைக் கொண்டு வெளுப்பார்கள்;
என்னுள்ளம் பற்றிய மாசதனை நீக்கிட
உன்பெயரை உச்சரித்தேன் நான்.

7. புவித்திரையில் வண்ணம் குழைத்து வரைந்த
கவித்துவ ஓவியத்தை எண்ணம் - குவித்துநாளும்
காண்பவனே! ஓவியனின் உள்ளத்தை உண்மையாய்
காண்பதற்குக் கூடவில்லை யோ?.

8. கதிரெழும் அக்கணமே தண்ணிழலும் சூழும்;
துதிப்பவன் பெற்றிடுவான் நன்மை - எதிரிருந்து
போற்றுகின்ற அக்கணமே; இல்லாயின் உண்மையாய்
போற்றவில்லை என்றே பொருள்.

9. இருவரில்லை இங்கிருந்து பார்க்கையில் யாவும்
ஒருவராய்த் தோன்றுவதே உண்மை; - உருவத்தால்
மாதவனும் மங்கையும் வேறாவர்; உள்ளத்தால்
காதலனும் காதலியும் ஒன்று.

10. உடைமைகள் எல்லாமும் சூதாடித் தோற்றும்
மடமதி மாறாமல் தன்னை - அடகு
பொருளாக வைத்தாடும் சூதாடி போலானேன்
அருளாளன் தாள்சேரத் தான்.

11. வெட்டவெளி கீதத்தை எவ்வா(று) எதிரொலிக்கும்;
கட்டைச் சுவருமில்லா பாலையினை - விட்டே
அருளாளன் கீதமுன்னுள் கேட்கும் வகையில்
ஒருவீட்டை உன்மனதில் கட்டு.

12. உய்யும் வழிநாடும் பண்புடையார் உண்பதற்குச்
செய்யும் பணியெது வாயினும் - மெய்யாய்ப்
பொருள்நிறைந்தான் தாளினைப் பற்றிநிற்பார்த் தம்மை
அருள்மழையில் முற்றாய் நனைத்து.

13. அவள்முகத்தைப் பார்க்கவில்லை யானாலும் என்ன?
அவள்முகமென் உள்ளத்தில் நிற்கும் - தவறாமல்;
ஏறிட்டுப் பூமுகத்தைக் காண்பேனேல் அக்கண்கள்
கூறிட்டுக் கொல்லும் எனை

14. பிறப்பால் வெளிப்பட்ட யாக்கையின் கூட்டை
இறப்பெனும் நேரம் உயிராம் - பறவை
விடுவித்துச் செல்லும்; அதற்குள் மனதால்
விடுதலை பெற்றுய்தல் பேறு.

15. கொத்தாய்ப் பலசாவி கொண்டுசெல் உன்கையோடு;
ஒற்றை ஒருசாவி போதாது; - பற்றைத்
துறந்தவர்கள் வைத்திருந்தார் பூரணத்தின் பூட்டைத்
திறப்பதற்குச் சாவியின் கொத்து.

16. பிறக்கையில் தன்னோடு வந்தவொன்றைப் பற்றிப்
பிறர்கையில் உன்னதெனச் சொல்லிக் கொடுத்தவற்றைத்
தள்ளி, இறையருளை இன்முகத்தோடு ஏற்பவர்
தெள்ளிய ஞானியா வார்.

17. திரையொன்று வாழ்வில் தடையாக உண்டு;
திரையதனை நீக்கி இறையதனைக் காண
வழியொன்றும் உண்டு; பெருமானார் தந்த
மொழியதனை மெய்யெனப் பற்று.

18. கறுப்புப் பளிங்குக்கல் மீது நகரும்
கறுப்புநிறச் சிற்றெறும்பைக் கண்ணை - உருட்டிநீ
பார்த்தாலும் காணாய்; அதுபோலச் சத்தியத்தைப்
பார்த்திட எண்ணாது உணர்.

19. யானை அருந்துதற்கு வைத்திருக்கும் பானத்தைப்
பூனை அருந்தத் தருவரோ? - வானையும்
மண்ணையும் ஒன்றெனக் காட்டுகின்ற ஞானரசம்
மண்மீதில் கொட்டுவதோ சொல்.

20. புவியில் வளர்ந்த மரங்களை யெல்லாம்
குவித்தெழுதும் கோலாக்கி ஆழ்கடல்நீ ரையெல்லாம்
மையாகக் கொண்டெழுதிச் சென்றாலும் தீராதே
ஐயாவுன் சீறாப் புகழ்.

21. உதயமாகும் ஞாயிறதன் வெள்ளொளி காண
உதயத்தில் வாவென் றழைக்கின்றாய்; எந்தன்
இதயத்தில் உள்ளான் படைத்தவன்நான் காண்பேன்
உதயத்தை வீட்டி லிருந்து.

22. பூவிலும் புல்லிலும் உன்முகம் காண்கிறேன்;
கூவிடும் புள்ளினமும் காட்டு விலங்கினமும்
உன்னை வணங்குதே; வானமும் வையகமும்
உன்னருளால் நிற்கும் நிலைத்து.

23 ஓரிடத்தும் தங்காதாம்; ராத்திரியில் தூங்காதாம்;
ஊரிடத்தில் தாழ்ந்திருக்கும்; கல்லடித்தால் - வேறிடத்திற்
போயதுவும் வாழ்ந்திருக்கும்; நாதனுக்கு நன்றியுள்ள
நாயதற்கு ஞானியரும் நேர்.

24. பொட்டலமாய் கட்டிப் பொதிந்த தனைத்தையும்
கட்டவிழ்த்து விட்டுவிடு; மேய்ப்பவன் - பட்டியில்
கட்டாத ஆடுகளாய் காட்டில் திரிபவற்றைக்
கட்டிவை உண்மை உணர்ந்து.

25. வண்டுகளும் புள்ளினமும் நாடிவந்து சூழ்ந்திடும்
வண்ணமலர் பூத்திருக்கும் தோட்டம்போல் - எண்ணமெனும்
குற்றமற்ற உள்ளத்தில் தோட்டமொன்று தோன்றுமாம்;
நற்றவத்தார் நாடுமதை நாடு.

26. கர்ப்பிணி தான்செய்யும் செய்கையவ் வொன்றிலும்
கர்ப்பிணிதான் என்று மறப்பதில்லை; - அர்ப்பணித்தேன்
உன்னிடம் என்மனதை அன்றி லிருந்துநான்
உன்னை மறக்கவில்லை யே.

27. இரவும் பகலும்நான் எங்கெங்கு சென்றாலும்
பரவும் ஒளிச்சுடராய் காண்பதெல்லாம் உன்முகம்தான்;
எல்லாப் பயணத்தின் ஈற்றடியில் காண்பதெல்லாம்
அல்லாவுன் பொன்னடி தான்.

28. பயிர்களெல்லாம் வேர்விட மண்தரையைத் தேடும்;
உயிர்களெல்லாம் உய்ந்திடவே சற்குருவை நாடும்;
இறைவனுக்கும் மாந்தருக்கும் பாலமாய் நின்று
மறைவழி சொல்வார் குரு.

29. பித்தளையா பொன்தானா என்றறிய வைத்திருப்பார்
பத்தர்கள் பொன்னுரைகல்; சூஃபியாரின் - சித்தம்
முழுமையே பாகமெனக் கண்டதுபோல் காட்டும்
முழுமையைச் சேர்ந்திடு மாறு.

30. இறைவனை நேர்கொண்டு காண்பதைப் போலே
இறைவனின் தாள்வணங்கு; அல்லால் - இறைவன்
இடைவிடாமல் நம்மையே காண்கின்ற எண்ணம்
விடைபெறாத வண்ணம் வணங்கு.

31. தன்நாயன் அல்லாவை யன்றி மனதுக்குள்
தன்னதென்று ஏதொன்றும் கொள்ளாது - மின்னலைப்
போலத்தம் தூய்மையைப் பேணுகின்ற கம்பளிக்
கோலமுற்ற சூஃபியரைப் போற்று.

32. தண்ணிலவும் சூரியனும் வானில் வலம்வரும்
விண்மீன்கள் கூட்டமும் ஓரிறைவன் அல்லாவைக்
கண்டு துதிக்கிறதே; அச்சிறந்த பாடத்தைக்
கண்டு விளங்கிக்கொள் ளே.

33. அவள்நினைவே எப்பொழுதும் உள்ளத்தில் தேங்கும்;
அவளருகே நிற்பதற்கே கால்களும் ஏங்கும்;
அவளன்றி என்வாழ்வில் ஒன்றும் நடவாது)
அவளென்னை உய்வித்த மெய்.

34. இறைவனை அன்றி இறையொன்று மில்லை;
இறைவனைக் காட்டும் குருவின் - உறவினை
நாடுவோம்; ஓதுகின்ற நேரமன்றி மற்றநேரம்
கூடுவோம் சாந்தமாய் நோற்று.

35. தனிமையைத் தோழனாக்கிச் செல்வேன் பயணம்;
புனிதமான ஏகன் நினைப்பே - இனியெனக்கு
உண்ணும் உணவாம்; படைப்பினத்தின் மீதிருக்கும்
எண்ணம் துறப்பேன் உணர்ந்து.

36. உன்னிலே மூழ்கிநான் உன்தாள் வணங்கினேன்;
உன்கருணைப் பார்வையால் உண்மையைச் சொல்வேன்;
அடிமையே ஆண்டான்ஆண் டானே அடிமை;
முடிவான மெய்ப்பொருளே நான்.

37. யாதொன்றும் மாற்றாரைக் கேளாரே; தானாக
ஏதொன்றும் வந்ததென்றால் தட்டாமல் ஏற்பாரே;
பிற்பாடு வேண்டுமென சேமித்து வைக்காது
நற்பாதை செல்வார் துணிந்து.

38. நிறைவான வாழ்வுபெற வேண்டின் நபியின்
மறைமொழி சொல்லும் வழிசெல்; - இறைநேசர்
தாகம் தணிப்பவனாம் உள்ளத்துள் நின்றொளிரும்
ஏகன் இறைவனைப் போற்று.

39. கண்ணாடி போலாகும் தேய்த்தால் கருங்கல்லும்;
கண்ணாடி யாகாதே தேய்த்தாலும் செங்கல்தான்;
கண்ணே! இரும்பும்தான் தீயின் குணமேற்கும்
தண்ணீர்தான் ஏற்காதே தீ.

40. தன்விருப்பம் ஏதுமின்றி நீராட்டும் மாந்தரிடம்
தன்னையே ஒப்படைத்துக் கொள்ளும் சவம்போல
உன்னைநீ ஓரிறைவன் அல்லாவின் ஒப்பிலாத
பொன்னடியில் ஒப்படைத்துக் கொள்.



"சூஃபி வழி-இதயத்தின் மார்க்கம்"

- நாகூர் ரூமி

1. நாயனே, உனது எல்லையில்லா ஒருமைக் கடலின் ஆழத்தில் என்னை நுழைத்துவிடு.. - **இப்னு அரபி** *(பக்கம் 41)*

2. பழத்தின் உள்ளே இருக்கும் பருப்பைச் சுவைக்க வேண்டுமானால், வெளியே உள்ள ஓட்டை உடைக்கத்தான் வேண்டும் என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். *(பக்கம் 36)*

3. அனுபவம் என்ற வகையில் முத்தம் பெற்றவன் அல்லது பெற்றவள் இன்னொருவரிடம் அதை விளக்க முடியாது. அப்படியே விளக்கினாலும் அது கேட்பவனுக்கு முத்த அனுபவத்தை தராது. அது காதலன், காதலி இருவருக்கு மட்டுமேயான பிரத்தியேக அனுபவம். அதை வேறு யாரிடமும் கைமாற்றி அல்லது வாய் மாற்றி கொடுக்க முடியாது. இதழ்களின் இணைப்பினால் அன்றி வேறு எந்த வகையிலும் அதைப் புரிய வைக்க முடியாது. அதை அனுபவித்துத்தான் புரிந்துகொள்ளவேண்டும். *(பக்கம் - 16)*

4. ஒரு மெழுகுவர்த்தியிலிருந்து இன்னொன்றுக்கு ஏற்றி வைப்பது போல, ஓர் இதயத்திலிருந்து இன்னோர் இதயத்திற்கு உண்மையின் ஒளியை ஏற்றி வைக்க குருவினால்தான் முடியும். *(பக்கம் - 38)*

5. சூஃபிகளை பொறுத்தவரை வணக்கம் ஆனது ஐவேளைத் தொழுகைக்கு அப்பாலும் உள்ளதாகும். சடங்கு ரீதியான தொழுகை, அவர்களைப் பொறுத்தவரை வணக்கத்தின் தொடக்கம்தான். வணக்கம் என்பதன் வரையறைக்குள் ஏராளமான விஷயங்கள் வரும். சரியான மனநிலையில் செய்யப்படும் மானிட முயற்சிகள் அனைத்துமே வணக்கமாகக்கூடிய சாத்தியம் உண்டு. அது தொழிலாக இருந்தாலும் சரி, மனைவியோடு கூடுவதாக இருந்தாலும் சரி. *(பக்கம்-77)*

6. *ஒவ்வொரு துருவையும், கறையையும் நீக்கும் பொருள் ஒன்று உண்டு. இதயத்தின் கறையை (திக்ர் எனப்படும்) இறைவனைப் பற்றிய தியானமே நீக்கும். (பக்கம் - 72)*

7. *ஓர் ஓவியத்தை ஆராய்வதன் மூலம், அதை வரைந்த ஓவியனைப் புரிந்து கொள்ள முடியும். அதேபோல இறைவனின் படைப்பினங்களைப் பற்றி ஆராய்வதன் மூலம் இறைவனை ஓரளவு அறிந்து கொள்ள முடியும். 'தன்னை அறிந்தவன் தன் நாதனை அறிவான்.' -* **நபிமொழி** *(பக்கம் 82 - 83)*

8. *ஒருவன் இன்று இறைவனை வணங்கியதற்கான பலன் நாளை வரை ஒத்தி போடப்படுமானால், இன்று அவன் இறைவனை ஒழுங்காக வணங்கவில்லை என்றே பொருள். -* **பிஸ்தாமி** *(பக்கம் - 218)*

9. *சூஃபி வழியில் இரண்டு என்பதே கிடையாது. ஒன்று மட்டும் தான். காதலனும் காதலியும் வேறுவேறல்ல. இரண்டு உடல்களைப் போல அவர்கள் தோன்றினாலும் மனதால் இரண்டறக் கலந்தவர்கள். அதேபோலத்தான் இறைக்காதல் கொண்ட சூஃபியின் நிலையும். (பக்கம் - 13)*

10. *ஒரு சூதாடியிடமிருந்துதான் உண்மையைத் தேடுவதற்கான விடாமுயற்சியையும், அர்ப்பணத்தையும் நான் கற்றுக்கொண்டேன். வைத்திருந்த எல்லாவற்றையும் ஆடித்தோற்றபோதும் அவன் விட்டுவிட வில்லை. தன் தலையை அடகு வைத்தாகிலும் ஆடித்தான் ஆக வேண்டும் என்று அவன் உறுதியாக இருந்தான். அவனிடமிருந்துதான் நான் மன ஓர்மையை கற்றுக்கொண்டேன். -* **பகாவுதீன் நஷபந்தி**. *(பக்கம் - 123)*

11. *மூன்று முறை ஓதியும் கேட்டவன் உள்ளத்தில் அது எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை எனில், ஆரிஃப் நாயகம், "இன்னும் நீங்கள் பக்குவம் பெறவில்லை. உங்களுக்கு அல்லாஹ் வழிகாட்டட்டும். உங்கள் வீட்டில் நான்கு சுவர்களும் இடிந்து கிடக்கின்றன. வெட்டவெளி சங்கீதத்தை எதிரொலிப்பதில்லை", என்று சொல்லி அனுப்பிவிடுவார்கள். (பக்கம் - 124)*

12. ஒரு சூஃபியானவர் ஒரு வியாபாரியாக, ஒரு வக்கீலாக, ஒரு விவசாயியாக, ஒரு ஆசிரியராக, வீட்டு அடுப்பங்கரையில் வேலை செய்துகொண்டிருக்கும் மனைவியாக, யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஏன் ஒரு விபச்சாரியாகக்கூட இருக்கலாம். (பக்கம் - 33)

13. அவளுடைய முகத்தை நான் பார்க்க முடியாவிட்டாலும் அவள் மீது அக்கறை கொண்டுள்ளது என் ஆன்மா. அவள் முகத்தை நான் ஏறிட்டுப் பார்ப்பேனாகில் அவளின் கறுத்த புருவங்களினால் கொல்லப்படுவேன். **(ஃபுகசூல் ஹிகம் - இப்னு அரபி)** (பக்கம் - 124)

14. முந்திக் கொண்டவர்கள் (ஸாபிக்கூன்) என்றும், நெருக்கமாகிக்கொண்டவர்கள் (முகர்ரபூன்) என்றும் திருமறை அடைமொழி கொடுப்பது சூஃபிகளுக்குத்தான் என்ற கருத்தோடு 'மரணம் வரும் முன் மரணித்து விடுங்கள்' என்ற ஹதீதை பொருத்திப் பார்க்க வேண்டும். (பக்கம் - 88)

15. ஆன்மிக பரிபூரணத்துவப் பூட்டைத் திறப்பதற்கு பல சாவிகள் உள்ளன. அவை அனைத்துமே நம்மிடம் இருக்க வேண்டும். ஏனெனில் ஒன்றில் திறக்காவிட்டால், இன்னொன்றில் பூட்டு திறந்து விடும். - **நிஜாமுதீன் அவுலியா** (பக்கம் - 428)

16. சூபித்துவத்தைத் தெரிந்து கொள்ள ஒரே ஒரு வழி தான் உள்ளது. சிலேட்டைக் கழுவி துடைத்துவிட்டு காலியாக வைத்திருப்பதுதான் அது. ஆங்கிலத்தில் (Tabula rasa) என்று சொல்வார்களே அப்படி. நம்பிக்கை, மதம்,கடவுள், ஆன்மா, ஆன்மிகம் ஞானம், ஞானகுரு, இம்மை, மறுமை, வானவர்கள், முஹம்மது, நபி, ரஸூல், சொர்க்கம், நரகம் என்று இதுவரை எதைப் பற்றியெல்லாம், எப்படி எல்லாம் நினைத்துக்கொண்டிருந்தோமோ அதை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு முற்றிலும் புதிதாக தொடங்குவதற்கு தயாராக இருக்க வேண்டும். (பக்கம் 16 & 17)

17. எந்த ஒரு காரியமும் பழக்கமாகிவிட்டால், மனித மனம் அதை எளிதில் ஏற்றுக்கொண்டுவிடுகிறது. அது இயல்பாகி விடுகிறது. நல்லதும் சரி கெட்டதும் சரி. ஏதாவது ஒன்று இப்படிப்

பழக்கமாகிவிடும்போது, அதுவே இறைவனை நெருங்குவதற்கு தடையாகவும், திரையாகவும் ஆகிவிடுகிறது. எனவே அத்திரையை கிழிக்க வேண்டியது ஒரு சூஃபிக்கு கடமையாகிறது. **(கஷ்ஃபுல் மஹ்ஜூப் - அல் ஹுஜ்விரி)** *(பக்கம் 174 - 175)*

18. *ஒரு கறுப்புக்கல் மீது ஊர்கின்ற கறுப்புச் சிற்றெறும்பு, எப்படி கண்களுக்கு தெரிவதில்லையோ, அதைவிட மறைவாக தனது அடியார்களிடத்தில் உள்ளான் இறைவன். -* **இமாம் ஜாஃபர் சாதிக்** *(பக்கம் - 215)*

19. *ஒரு முறை ஹஸன் பஸரி தனது ஆன்மிக சொற்பொழிவைத் தொடங்காமல் தாமதித்துக்கொண்டிருந்தார். "எல்லோரும் தான் வந்து விட்டார்களே. ஏன் இன்னும் சொற்பொழிவைத் தொடங்கவில்லை?" எனக்கேட்டதற்கு "ராபியா வரட்டும்" என்றார். "அந்தக் கிழவிக்காகவா காத்திருக்கிறீர்கள்? நாங்கள் போதாதா? "எனக்கேட்டதற்கு "யானைகள் குடிப்பதற்கான பானத்தை நான் எப்படி எறும்புகளின் பாத்திரத்தில் ஊற்றி நிரப்புவது" என்றார்* **ஹஸன் பஸரி.** *(பக்கம் - 279)*

20. *இந்த உலகத்தில் உள்ள செடி கொடிகளை எல்லாம் எழுது கோல்களாக்கி, ஏழு கடல் நீரையும் மையாக்கி எழுதினாலும் இறைவனின் வசனங்கள் முடிவு பெறுவதில்லை. –* **திருக்குர்ஆன்** *(31:27) (பக்கம் - 75)*

21. *ஒரு முறை, ஒரு பெண் வந்து வீட்டில் வணங்கிக்கொண்டிருந்த ராபியாவை, 'வெளியே வந்து இறைவனின் படைப்புகளின் அழகை பாருங்கள்' என்று அழைத்தார். அதற்கு ராபியா,' நீ உள்ளே வந்து அந்த அழகான படைப்புகளை உருவாக்கிய இறைவனை பார்' என்று அழைத்தார் (பக்கம் 292 - 293)*

22. *வணக்கம் என்பது எங்கும் நிறைந்தது. ஜம்பூதங்களும் வணங்குகின்றன. மரம் செடி, கொடிகளும்.. அவற்றின் வேரும், தண்டும் கொம்பரும், இலைகளும், தளிர்களும், பூக்களும், பிஞ்சுகளும், காய்களும்,*

கனிகளும், மிருகங்களும், பறவைகளும் மற்றும் பிராணிகளும் வணங்குகின்றன. அவற்றின் உறுப்புகள் யாவும் வணங்குகின்றன. மனிதன் எடுத்துவிடும் மூச்சும் வணங்குகின்றது. அணுக்களும் வணங்குகின்றன. அனைத்தினது வளர்ச்சிக்கும் முழு காரணமாய் அமைந்துள்ளது வணக்கமே. வணக்கம் இன்றேல் வளர்ச்சியும் இராது. வாழ்வும் இராது. உலகமும் இராது. – **சூஃபி கலீல் அவ்ன் மௌலானா**. (பக்கம் - 77)

23. நாயின் நற்பண்புகள்:

1. நாய்க்கு தங்குவதற்கென ஒரு குறிப்பிட்ட இடம் கிடையாது.
2. அது இரவில் கொஞ்ச நேரமே தூங்கும்
3. பூமியில் அது தாழ்ந்த இடத்தை பொருத்திக்கொண்டு அதில் படுத்துக்கொள்ளும். இந்தப் பணிவு நல்லோர்களின் குணமாகும்.
4. ஓரிடத்தை விட்டு அதைக் கிளப்பிவிட்டால், அந்த இடத்தை மீண்டும் அது திரும்பிப்பார்க்காது. இது விசாரமுடையவர்களின் குணமாகும்.
5. அதன் எஜமான் அதை எத்தனை தடவை அடித்தாலும் அது அவனை விட்டு அகலாது. (பக்கம் 182 - 183)

24. கட்டி வைத்ததை அவிழ்த்து விடு. அவிழ்த்து விட்டதைக் கட்டி வை. முன்னது செல்வத்தையும் பின்னது நாவையும் குறித்தது – **இப்ராஹிம் இப்னு அதஹம்.** (பக்கம் - 335)

25. ஹக்கீம் ஸனாயின் மிகச் சிறந்த படைப்பாகிய ஹதீகாவின் முழுப்பெயர் "ஹதீஹத்துல் ஹகாயிக்" (உண்மையின் தோட்டம்). ஹதீகா என்ற சுருக்கமான பெயர் தோட்டத்தைக் குறிக்கும். தோட்டம் என்பது சுவர்க்கம். அந்த ஹதீகா நமக்குள்ளேயே இருப்பதுதான், அதை வெளியில் எங்கும் தேட வேண்டியது இல்லை என்கிறார் **ஸனாய்.** (பக்கம் - 225)

26. சரியான இறை சிந்தனை உள்ளவர்கள் எந்தக் காரியம் செய்தாலும் அதில் இறை சிந்தனை இருக்கத்தான் செய்யும். ஒரு கர்ப்பிணிப் பெண் நடக்கும்போதும், குனியும்போதும், உட்காரும்போதும் தன்னுள்ளே ஓர் உயிர் இருக்கிறது என்பதை மறக்க முடியாததைப் போல. (பக்கம் - 168)

27. கிழக்கும் மேற்கும் இறைவனுக்குரியன. நீங்கள் எங்கு திரும்பினாலும் அங்கு அவள் முகமே தெரிகிறது. நீங்கள் எங்கிருந்த போதும் அவள் உங்களோடு இருக்கிறாள். (பக்கம் - 80)

28. குருவானவர் மண் மாதிரி. அவரினுள் வேர் விட்டுத்தான் சீடன் வளர வேண்டும். இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையேயான பாலம் குருதான். குருவின் நெருக்கமே இறைவனுடன் நெருக்கத்திற்கு வழிவகுக்கும். குருவின் அனுமதியும் ஆசியும் இல்லாமல் ஒரு சீடரால் ஆன்மீகப் பாதையில் எதையுமே அடைய முடியாது. (பக்கம் - 360)

29. உரை கல்லை அறிமுகப்படுத்துவதுதான் சூஃபித்துவம். உங்களுக்கும் இறைக்கும் இடையில் உள்ள தடையை, பகுதிக்கும் முழுமைக்கும் இடையில் உள்ள தடையினை அகற்றுவது சூஃபித்துவம். (பக்கம் - 25)

30. இறைவனைப் பார்த்துக்கொண்டிருப்பதைப் போல தொழ வேண்டும். அது முடியவில்லையாயின் இறைவன் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்ற நினைப்பில் தொழ வேண்டும். இதைத்தான் 'இஹ்ஸான்' என்று நபிகள் நாயகம் கூறினார்கள். (பக்கம் - 79)

31. உளத்தூய்மையே சூபிக்கான வரையறை. தன் நாதன் அல்லாஹ்வைப் பற்றியல்லாத வேறு சிந்தனை எதுவும் தன்னகத்தே எழா வண்ணம் தூய்மை உடையவனே சூஃபி ஆவான் - **ஃபத்ஹுர் ரப்பானி** - ெகௗதுனா (பக்கம் - 61)

32. எழுவானும் புவியும் அவற்றில் உள்ளவையும் அவரைத் துதிக்கின்றன. எனினும் அவற்றின் இருப்பை உங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை (பக்கம் - 82)

33. எல்லாமே இறைவனாகத்தான் உள்ளது. இறைவனைத் தவிர எதுவுமே இல்லை. எல்லாமே அந்த ஒன்றுதான் என்று புரிந்துகொள்வது அனுபவத்தின்பால் பட்டதே. அந்த அனுபவத்தைத்தான் சூஃபிகள் விளங்க முடியாத வார்த்தைகள் மூலம் சொல்ல முயன்றார்கள். கண்டவர் விண்டது அது. அதனால் அந்த அனுபவம் அல்லது அதையொத்த அனுபவம் இல்லாதவர்களுக்கு அது சரியாக புரிய வாய்ப்பில்லை. (பக்கம் - 440)

34. இறைவனை தியானம் செய்கின்ற, திருக்குர்ஆன் ஓதுகின்ற நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் அமைதியாக இருக்க வேண்டும். சற்குருவை தேட வேண்டும். - இப்னு அரபி (பக்கம் - 171)

35. ஆன்மிகப் பாதையில் செல்பவருக்கு தனிமையே மிகச் சிறந்த நண்பன். இறைவனைப் பற்றிய நினைப்புதான் என் ஆன்மாவுக்கான உணவு. படைப்பினங்கள் மீதான பிரியம் மறைவதுதான் படைத்தவன் மீது பிரியம் ஏற்பட்டுள்ளது என்பதற்கு அறிகுறி. (பக்கம் - 208)

36. அடிமைதான் ஆண்டவன்; ஆண்டவன் தான் அடிமை;
ஷெய்குல் அக்பர் - **இப்னு அரபி** (பக்கம் - 158)
நானே மெய்ப்பொருள். (அனல் - ஹக்)
- மன்சூர் அல்ஹில்லாஜ்

37. எதையும் பிறரிடம் கேட்காமலிருப்பது, தானாக வருவதை தட்டாமல் ஏற்றுக் கொள்வது நாளைக்கென எதையும் சேமித்து வைக்காதிருப்பது ஆகிய மூன்று குணங்கள் மீது தம் பாதை கட்டப்பட்டதாகும் என்று ஆரிஃப் நாயகம் கூறினார்கள். (பக்கம் - 125)

38. ஒரு சூஃபியானவர் இறைவனுடைய வேத வார்த்தைகளோடும், நபி மொழியோடும் எத்தகைய ஆழமான உறவு கொண்டவர் என்பதை விளங்கிக்கொள்ளுங்கள் எல்லா சூஃபிகளுடைய தொடக்கமும்

இந்த இரண்டாகத்தான் உள்ளது. இந்த இரண்டையும் ஒதுக்கிவிட்டு ஒருவர்கூட கிடையாது. (பக்கம் - 404)


39. எவ்வளவுதான் தேய்த்தாலும் செங்கலில் முகம் பார்க்க முடியாது. இந்த நூல் (சூஃபி வழி இதயத்தின் மார்க்கம்) செங்கற்களுக்காக அல்ல. கண்ணாடியை பிரதிபலிக்கும் சாத்தியம் கொண்ட கருங்கற்களுக்கு அல்லது கிரானைட் கற்களுக்கு. எல்லா பொருள்களாலும் காந்த சக்தியை உள்வாங்கிக்கொள்ள முடியாது. தீயின் குணங்களை இரும்புக்கு ஏற்றலாம். ஆனால் தண்ணீருக்கு ஏற்ற முடியாது. (பக்கம் - 23)

40. இறந்த உடல் எப்படி தன்னைக் குளிப்பாட்டுபவனின் கையில் ஒப்படைத்து விடுமோ, அப்படி ஒரு அடியான் இறைவனிடம் தன்னை ஒப்படைக்க வேண்டும். அதுதான் சரியான தவக்குல். – ஹுனைன் (பக்கம் - 157)

ஆசிரியர் குறிப்பு

- ச.கந்தசாமி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர். திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தவர்.
- தந்தை சங்கரசுப்பு, தாயார் மல்லிகா.
- தமிழ் இலக்கியத்திலும், பொது நிர்வாகத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மாநில குடிமைப் பணி அலுவலராக பணியாற்றியவர், 2024ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று இந்திய ஆட்சிப்பணி (I.A.S.) அலுவலராக பணியாற்றிவருகிறார்.

ஆசிரியரின் பிற நூல்கள்



1. **சென்பா நாற்பது** - புத்தமதத்தின் 'சென்' பிரிவு ஞானம் குறித்த 40 எளிய வெண்பாக்களின் தொகுப்பு. (கீதம் பதிப்பகம்)

---

2. **மகளாற்றுப்படை** - தந்தை மகள் பாசம் குறித்த 60 வெண்பாக்களின் தொகுப்பு.
(சுடர்விழி பதிப்பகம்)

